வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 09.09.2021 வியாழக்கிழமை | இதழ் : 278 | பக்கங்கள் : 16

# சர்வதேசத்துக்கு அரசு சென்றால் நாமும் அதனையே செய்வோம்

## வத்திக்கானுக்கும் நிலைமையை விளக்கியதாக கூறுகிறார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, செப்ரெம்பர் 09

"அரசாங்கம் சர்வதேசத்துக்குச் சென்றால் நாங்களும் அதையே செய்வோம், எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் ஏற்கனவே வத்திக்கான் பிரதிநிதியிடம் நீதி குறித்து விளக்கினோம். மேலும் இந்த விடயம் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பப்படும் என்று அவர்கள் எங்களுக் குத் தெரிவித்துள்ளனர்" என்று கொழும்பு மறைமாவட்ட பேரா யர், கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

15

## பாப்பரசரை மஹிந்த சந்திக்கும் திட்டமில்லை!

கொழும்பு, செப். 09

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இத்தாலி விஜயத்தின் போது பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகையை சந்திப்பாக வெளியாகும் செய்தி கள் உண்மைக்கு புறம்பானதாகும் என பிரதமரின் ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

"இத்தாலிக்கு உத்தியோகப்பூர்வ விஜ

15

## நேற்று 2,915 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, செப். 09

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 2 ஆயிரத்து 915 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகா தார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரி வித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 74 ஆயிரத்து 778 ஆக அதிகரித்துள்ளது.

15

## 102 ஆண்கள் உள்ளிட்ட மேலும் 185 பேர் மரணம்

கொழும்பு, செப். 09

நாட்டில் மேலும் 185 பேர் கொரோனா வைர ஸால் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளி யிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்

15

## யாழ்ப்பாணத்தில் தொற்று குறைந்தபாடாக இல்லை!

### யாழ். அரச அதிபர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 09

யாழ்.மாவட்டத்தில் தொற்று நிலைமை சரியான முறையில் குறைந்தபாடாக இல்லை. கடந்த சில நாள்களில் குறைந்து செல்லும் போக்கைக் காட்டி யது. எனினும் தற்போது ஏற்ற இறக்கமாக காணப்படுகின்றது என யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரி வித்தார்

யாழ்.மாவட்ட செய

15

## யாழ்ப்பாணத்தில் மேலும் நால்வர் கொரோனா தொற்றினால் மரணம்

யாழ்ப்பாணம், செப். 09

யாழ். மாவட்டத்தில் மேலும் 4 பேர் கோவிட் -19 நோயினால் உயிரிழந்தனர் என்று நேற்று இரவு 10 மணிவரையான தகவல்கள் தெரிவித்தன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பருத்தித்துறையைச் சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவர் உயிரி ழந்தார்.

15

## கொரோனாவால் ஒரு வருடத்துக்கு கருத்தரிப்பதை ஒத்திவையுங்கள்!

### விசேட மருத்துவ நிபுணர் கோரிக்கை

கொழும்பு, செப். 09

இலங்கையில் கொரோனா வைரஸ் திரிபுக்களின் அச்சுறுத் தல் நிலவுவதால், பெண்கள் கருத்தரிப்பதை ஒருவருடத் துக்கு ஒத்திவைப்பது நல்லது என்று விசேட மருத்துவ நிபு ணர் ஹர்ஷ அத்தபத்து தெரி வித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணி யகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதேஅவர் இத னைக் கூறினார்.

15

## யாழில் 41 பேர் உட்பட வடக்கில் 75 தொற்றாளர்!

### யாழ். போதனா மருத்துவமனை ஆய்வக முடிவு

யாழ்ப்பாணம், செப். 09

யாழ். மாவட்டத்தில் 41 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 15 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 75 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

15

## அனைத்து தேர்தல்களும் ஒரே முறையில் நடத்தப்படுவதற்கான ஏற்பாடு வேண்டும்

### ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பு

கொழும்பு, செப். 09

பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொதுவான தேர்தல் முறையொன்று அறி முகப்படுத்தப்பட வேண்டும் என் றும், இதன் கீழ் பிரதிநிதிகளின் தெரிவு 65 வீதம் தொகுதி வாரி முறையிலும் 25 வீதம் விகிதாசார முறை

15

## ஜெனிவா தீர்மானத்தினால் தீர்வு கிடைக்காது; குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்துங்கள்!

### மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பிய கடிதத்தில் வலியுறுத்துகின்றது தமிழ் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், செப். 09

"ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத் தின் மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது, எனவே இந்த விவகாரத்தை சர்வதேச குற்ற வியல் நீதிமன்றத்திற்கு பாரப் படுத்த வேண்டும்" என தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் எதிர் வரும் 13 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்ப மாகவுள்ள நிலையில்,

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

இது ஒரு பெர்ஷிய குட்டிக் கதை.

ஒருவன் தனது கிணற்றை ஒரு விவசாயிக்கு விற்றான்.

வாங்கிய விவசாயி அடுத்த நாள் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க ஆவலுடன் கிணற்றுக்கு வந்தான்.

அப்போது விற்றவன் அங்கே நின்று கொண்டிருந்தான். விவசாயியை தண்ணீர் எடுக்க விடாமல் தடுத்தான்.

விவசாயிக்குக் கோபம் வந்தது. "எனக்குக் கிணற்றை விற்று விட்டு அதிலிருந்து தண்ணீர் எடுக்க விடாமல் செய்கிறாயே?" என்று விற்றவனை கோபத்துடன் கேட்டான்.

விற்றவன் "ஐயா! உமக்கு நான் கிணற்றை மட்டும்தான் விற்றேன். அதிலிருக்கும் தண்ணீரை அல்லவே!" என்று தர்க்கம் செய்தான்.

விவசாயி குழப்பத்துடனும் கோபத்துடனும் நீதிமன்றம் சென்று முறையிட்டான்.

நீதிபதி இருவரையும் அழைத்து இருவர் பக்கத்து நியாயத்தையும் விசாரித்தார். பின்னர் கிணற்றை விற்றவனிடம் "நீ கிணற்றை விற்றுவிட்டபடியால் அது உன்னுடையதல்ல. அதில் உனது தண்ணீரை இன்னமும் வைத்திருப்பது தவறு. உனக்கு அதில்தான் தண்ணீரை சேமித்து வைக்க வேண்டுமென்றால் விவசாயிக்கு அதற்கான வாடகையை தினமும் கொடுத்து விடு. இல்லையென்றால் கிணற்றிலிருந்து உனது தண்ணீரை எடுத்துக் கொண்டு உடனே வெளியேறு" என்று தீர்ப்புக் கூறினார்.

யுத்தம் முடிந்த கையோடு இலங்கைக்கு வந்த அப்போதைய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் அவர்கள் பின்னர், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம் பெற்ற யுத்த மீறல்களை விசாரிக்க நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்தார். தருஸ்மன் தலைமையில் அமைக்கப்பட்ட அந்தக் குழு விசாரணை நடத்தி விடுதலைப் புலிகளும், அரச படைகளும் செய்த யுத்த மீறல்களை உறுதிசெய்தது.

இதனையடுத்தே ஐக்கிய நாடுகள் சபை இந்த விடயத்தில் விசாரணை நடத்துமாறு தனது மனித உரிமைகள் பேரவைக்கு சிபாரிசு செய்தது.

அதன் பின்னரே இன்றுவரையான ஜெனிவா விவகாரங்கள் தொடர்கின்றன.

இனி விடயத்திற்கு வருவோம். நடக்கவிருக்கும் ஜெனிவா கூட்டத்தொடரில் அறிக்கையிடவுள்ள ஆணையாளருக்கு அனுப்புவதற்காக தமிழ் அரசுக் கட்சி (கூட்டமைப்பு சார்பில் என்று சொல்லப்படுகின்றது) ஆவணம் ஒன்றை தயார் செய்தது. அந்த ஆவணத்தைத் தயார் செய்யக்கூடிய ஒரே தலைவர் தமிழ் அரசில் சுமந்திரன்தான் என்பதையும் யாரும் மறுக்கமாட்டார்கள்.

அந்த ஆவணத்தில், விடுதலைப் புலிகள் யுத்தமீறல்களில் இடம்பெற்றதாகக் கூறவேண்டியதில்லை என்று நமது தலைவர்கள் சிலர் இப்போது கூக்குரலிட்டு வருகின்றனர். உண்மைதான், விடுதலைப் புலிகள் நீலன் திருச்செல்வம் போன்ற ஆளுமைகளை படுகொலை செய்தபோதே அதனை நியாயப்படுத்தியவர்களால் அதனை ஏற்றுக்கொள்ளமுடியாதுதான்.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபை நடத்திய விசாரணைகளிலேயே அரச படைகள் யுத்த மீறல்களில் ஈடுபட்டன என்று 'தீர்ப்பு' அளிக்கப்பட்டிருப்பதால் அந்த தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுங்கள் என்று கேட்பது நமது கோரிக்கைக்கு பலம் அல்ல மகாபலம் சேர்க்கின்ற விடயம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு அந்தத் தீர்ப்பை மேற்கோள் காட்டுகின்றபோது, புலிகளைத் தவிர்த்து என்றால்- அதாவது அதனை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், அது அரச படைகளின் மீறல்களையும் நாம் ஏற்றுக்கொள்ளாததற்கு சமமானது.

அது கிணற்றை விற்றுவிட்டு தண்ணீர் எங்களுடையது என்பதற்கு ஒத்தது.

இந்தப் பத்தியில் சுமந்திரனின் தவறுகளை தொடர்ச்சியாக சுட்டிக்காட்டிவருவதால், அவர் செய்கின்ற சரியான விடயங்களையும் சுட்டிக்காட்டவேண்டியது எமது தார்மீக கடமை.

சுமந்திரனின் ஆளுமை கேள்விக்கு இடமில்லை. ஆனால், அவரின் ஆளுமையால் தமிழ் மக்கள் பயன் அடையவேண்டுமானால், அவர் இந்த யாழ்ப்பாணத்து தமிழ் தேசிய அரசியலில் இருந்து அதனைச் செய்யமுடியாது என்பதை அவர் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

புலிகளின் ஆயுதப் போராட்டத்தை நான் ஆதரிக்கவில்லை என்ற தனது கருத்தைத் துணிச்சலுடன் சொன்ன அவரே, பின்னர் மில்லருக்கு அஞ்சலி செலுத்த வேண்டிய நிலைக்கு மாறவேண்டியிருந்தது.

மனதில் ஒரு முகத்தையும் வெளியே இன்னுமொரு முகத்தையும் காட்டிக்கொண்டு இங்கு தொடர்ந்து அரசியல் செய்வது கடினமானது என்பதை அவர் இப்போது உணர்ந்திருப்பார்.!

**- ஊர்க்குருவி**

## "எனக்கு எவ்வித அழுத்தங்களும் தரப்படவில்லை"

### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்

கொழும்பு, செப். 09

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் என்ற ரீதியில் எனக்கு எவ்வித அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை. ஆனால், ஏனையோருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறதா என்பது தொடர்பில் எனக்கு தெரியாது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் விதிமுறைகளைப் பின்பற்றுவதற்கான பரிந்துரைகளை முன்வைப்பது மாத்திரமே சுகாதார தரப்பினரின் கடமையாகும். அவற்றை மக்கள் பின்பற்றுகின்றனரா இல்லையா என்பதையும் சுகாதார தரப்பினரே கண்காணிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது தவறாகும்.

சுகாதார தரப்பினராக நாம் எமது கடமையை நிறைவேற்றுவதைப் போலவே, ஏனையோர் அவரவர் கடமையை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். (ஐ)

## கோவிட் ஒழிய வேண்டி நாக விகாரையில் பிரித்!

மானிப்பாய், செப். 09

நாட்டின் மூவின மக்களும் கோவிட்- 19 கொடிய நோயில் இருந்து விடுபட்டு - சுகம் பெற்று நிம்மதியுடன் தமது உறவுகளுடன் நீடித்து வாழ வேண்டும் எனும் நோக்குடன் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். நகரிலுள்ள நாக விகாரையில்பிரித் ஓதும் விசேட வழிபாடு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியும் மாவட்ட கோவிட் - 19 கட்டுப்பாட்டு செயலணியின் பிரதானியுமான மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு பங்கேற்பார் என்று இதன் ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## நல்லூரில் இன்று யாகம்!

மானிப்பாய், செப். 09

உயிர்கொல்லி கொரோனா நோய் மற்றும் கொடிய ஆபத்துக்களிலிருந்து அனைத்து ஜீவராசிகளையும் இறைவான் பாதுகாக்க வேண்டும் எனக் கோரி மஹா மீருத்திங்கிய ஹோமம் (யாகம்) இன்று காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நல்லூர் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள கமலாம்பிகை கைலாசநாதர் ஆலயத்தில் இந்த யாகம் ஆரம்பமாகும் என்று இதன் ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட படைகளின் கட்டளை தளபதியும், மாவட்ட கோவிட் - 19 கட்டுப்பாட்டு செயலணியின் பிரதானியுமான மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு பங்கேற்பார்.

இந்த நிகழ்வில், யாழ். பல்கலை துணைவேந்தர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் உட்பட பல உயர் அதிகாரிகளும் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

### கல்வி TV CHANNEL-1 — 02.01.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2 — 02.01.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
09.09.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# இந்த முரண்பாடுகளின் பயன் என்ன?

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் எதற்கு முரண்பட வேண்டும் - எதற்கு முரண்படக்கூடாது என்பதில் எவரிடமும் தெளிவில்லை. யுத்தம் நிறைவுற்று 12 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும்கூட, தமிழ் அரசியல் அறிவுபூர்வமாக நகரவில்லை. இப்போதும் தங்களில் யார் சுத்தமானவர் என்னும் அர்த்தமற்ற விவாதங்களிலேயே தமிழ்த் தேசியத் தரப்புக்கள் தங்களின் நேரத்தை செலவிட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் அதனை அடிப்படையாகக்கொண்டு புதிய முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் ஏனைய சில கட்சிகளும் இணைந்து ஒரு கடிதம் அனுப்பியிருக்கின்ற நிலையில், சம்பந்தனின் கையெழுத்துடன் பிறிதொரு கடிதமும் அனுப்பப்படவுள்ளது. இந்த நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், கட்சியின் உறுப்பினர்கள் சிலரும் இணைந்து, பிறிதொரு கடிதத்தை அனுப்பவுள்ளனர். இவ்வாறனதொரு தனியான கடிதம் ஒன்றில் தாம் கையெழுத்திட்டமையை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் ஈழநாட்டிடம் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

ஏன் இத்தனை கடிதங்கள்? இதனால், தமிழ் மக்களின் அரசியல் நகர்வுகளில் ஏற்படப்போகும் முன்னேற்றங்கள் என்ன? இவ்வாறு வேறுபட்ட கடிதங்களை அனுப்புவதால், மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்களுக்கு சாதகமான முடிவுகள் மேற்கொள்ளப்படுவற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றனவா? மேற்படி அனைத்துக் கேள்விகளுக்குமான பதில் - ‘இல்லை’ என்பதே! ஏனெனில், தமிழ் கட்சிகளால் அனுப்பப்படும் கடிதங்களுக்கும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஏனெனில், தமிழ்க் கட்சிகளின், சிவில் சமூக அமைப்புக்களின் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் கருத்துக்களின் அடிப்படையில் பேரவையின் முடிவுகள் அமைந்திருக்குமாயின், இப்போது இலங்கை விவகாரம் ஐ. நா. பாதுகாப்பு பேரவையில் விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும். யுத்தம் நிறைவுற்று 12 வருடங்கள் சென்றுவிட்ட நிலையிலும்கூட, இலங்கையின் மீதான சில மென்மையான அழுத்தங்களுடன்தான் ஜெனிவா நகர்வுகள் முடங்கியிருக்கின்றன.

அவ்வாறாயின் இந்த முரண்பாடுகளின் பின்னணிதான் என்ன? இந்த முரண்பாடுகள் தேர்தல் அரசியல் தொடர்பானது. யார் அதிகம் விடுதலைப் புலிகள்மீது விசுவாசம் கொண்டிருக்கின்றனர் என்பதை காண்பிப்பதன் ஊடாக, தேர்தலில் தங்களுக்கான வாக்கு வங்கியை உயர்த்திக்கொள்வது தொடர்பிலேயே அனைவரும் சிந்திக்கின்றனர். சுமந்திரன் - சம்பந்தன் வரைந்திருக்கும் கடிதம் விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்னும் குற்றச்சாட்டை முன்வைத்து, தாம் அதனை எதிர்க்கின்றோம் என்பதை மற்றவர்கள் காண்பிக்க முயல்கின்றனர். ஆனால், இவர்கள் அனுப்பும் கடிதங்களை ஆகக்குறைந்தது மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளால் வாசிக்கப்படுமா என்பதுகூட சந்தேகமான ஒன்றே. ஏனெனில், பேரவையின் ஆணையாளர் தனது வாய்மொழி மூல அறிக்கையை எப்போதோ தயார் செய்திருப்பார். அது தொடர்பான இறுதி முடிவுகளும் எடுக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறான முரண்பாடான செயல்பாடுகளால் பேரவையின் முடிவுகளில் எந்தவொரு மாற்றமும் ஏற்படப்போவதில்லை. ஆனால், தமிழ் மக்களின் உள்ளக அரசியலே இவ்வாறான செயல்பாடுகளால் பலவீனமடைந்து செல்கின்றது. ஏற்கனவே, பலவீனமாக இருக்கின்ற தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு மேலும் சிதைவடையும். இதனால், அரச ஆதரவு தமிழ் கட்சிகளின் ஆதரவுகள் அதிகரிக்கலாம். ஏனெனில், தமிழ் மக்களை ஒரு திரட்சியாக நிரூபிக்கக்கூடிய அரசியல் கட்டமைப்புக்கள் மேலும்மேலும் சிதைவடையும்போது, தமிழ்த் தேசியத்திற்கு எதிரான தமிழ் தரப்புக்களுக்கே அது வாய்ப்பாக மாறும். தற்போதைய சூழலில் ஒப்பீட்டு அடிப்படையில் தமிழ் மக்களை ஒரு திரளாக பேணிப்பாதுகாப்பதில் கூட்டமைப்பே முதன்மையான சக்தியாக இருக்கின்றது. கூட்டமைப்பு மேலும் பலவீனமடையுமாக இருந்தால் தமிழ் மக்களின் வாக்குகள் மேலும் சிதறிப்போகும்.

# ஜெனிவா ‘வைத்த வேட்டு’!

**- அலசுவது இராஜதந்திரி -**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இன்னும் ஓரிரு தினங்களில் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தடவை பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை முழுமையாக ஏற்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் காட்டிவருகின்ற அசமந்தப் போக்கு குறித்து அறிக்கையிடுவதில் தமிழ் அரசியல் தரப்பினரிடையே இழுபறி நிலை காணப்பட்டிருந்தது.



வடக்கு - கிழக்கில் ஏற்பட்டிருந்த மனிதா பிமானப் பிரச்னை என்பது அனைவருக்குமே ஒரு பொதுவான விடயமாகும். ஆனால், இந்தப் பிரச்னையைக்கூட ஓரணியில் நின்று ஒரே குரலில் சர்வதேச சமூகத்துக்கு வெளிப் படுத்த முடியாதவர்கள் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருப்பது வேதனைக்குரியதாகவே இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான அரசியல் கட்சியான தமிழ் அரசுக் கட்சி சார்பாக ஆர். சம்பந்தனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒன்பது பேர் கொண்ட மற்றுமோர் அணியினர் வேறொரு கடிதத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

**சம்பந்தனின் கடிதம்**

சம்பந்தனால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டிருந்தனர் என்று முன்னாள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளதை குறிப்பிட்டுள்ளதே தமிழ் அரசுக் கட்சியின் மற்றைய தரப்பினரின் கண்டனத்துக்கு உள்ளாகியிருந்தது.

சம்பந்தனால் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றி குறிப்பிடப்பட்ட விடயம் தமிழ் அரசுக் கட்சியிலுள்ள மாற்று அணியினருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளும் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டிருந்ததை சர்வதேச சமூகம் நன்கறிந்தே வைத்துள்ளது.

வடக்கு - கிழக்கில் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற 2009ஆம் ஆண்டில் மட்டுமல்ல. எண்பதுகளில் வடக்கு - கிழக்கில் சட்டம் ஒழுங்கு நிலைகுலைந்த காலம் முதல் அப்பட்டமான முறையில் மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றதை முற்று முழுதாக மறுத்து விடமுடியாது.

இருந்தபோதிலும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் இன்னும் ஓரிரு தினங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஏற்கனவே யுத்தக் குற்றங்கள் என்று கண்டறியப்பட்டவை குறித்து பொறுப்புக்கூறல் உட்பட நில அபகரிப்பை சுட்டிக்காட்டி, சுயநிர்ணய உரிமை என்பவை சம்பந்தமாக வலியுறுத்தப்பட்டு நல்லிணக்கத்தைக்கோரி நிற்கும் தீர்மானங்களே இந்தத் தடவை முக்கியத்துவம் பெற்றுள்ளன.

**ஒரே குரலின்மை**

எது எப்படியிருந்தபோதிலும் வடக்கு - கிழக்கில் மனித உரிமைக்ள மீறல்கள் எண்ணிலடங்காத முறையில் இடம்பெற்றுள்ள நிலையில் வடக்கு - கிழக்கின் அனைத்து அரசியல் தரப்பினரும் ஒரே குரலில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நீதி கோர வேண்டியதே அவசியமானதாகின்றது.

ஆனால், அவ்வாறு குரல் கொடுப்பதற்குப் பதிலாக பிரதான கட்சியான தமிழ் அரசுக் கட்சிக்குள்ளேயே இரு அணிகளாக பிரிந்து கடிதங்களையும், அறிக்கைகளையும் முன்வைக்க வந்துள்ளமை சர்வதேச சமூகத்துக்கும் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்பினரிடையே நிலவுகின்ற ஒற்றுமையின்மையை கோடிட்டுக்காட்டுவதாகவே இருக்கின்றது.

அரச தரப்பில் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு பதின்மூன்று பக்க அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார். ஆனால், வடக்கு-கிழக்கில் மனித உரிமைகள் பெருமளவு மீறப்பட்டுள்ள நிலையில் ஒன்றாக அமர்ந்து ஒரே அணியாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதத்தையோ, அறிக்கையையோ அனுப்பி வைப்பதற்கு பதிலாக ஒரே கட்சியிலிருந்தே இரு வேறு அணிகளாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை சர்வதேச சமூகத்தையே குழப்பத்திலாழ்த்துவதாக அமைந்துள்ளது. அத்துடன், தமிழ் அரசியல் தரப்பில் நிலவுகின்ற ஒற்றுமையின்மையை தெளிவாக வெளி உலகுக்கு வெளிப்படுத்துவதாகவும் இருக்கின்றது.

இந்நிலையில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் சம்பந்தமாக வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் தரப்பு ஓரணியில் வரமுடியாதுள் ளதை நோக்கும்போது தமிழ் தரப்பின் ஒற்றுமையின்மையை ஜெனிவா ‘வேட்டு வைத்து’ வெளிப்படுத்தியுள்ளதென்றே குறிப்பிட முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
அக்கம்பக்கத்தினருடன் இருந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கும். பலகாலம் அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். கருத்து வேறுபாட்டால் யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**இடபம்**
பணி நெருக்கடிகள் குறைந்து நிம்மதி வரும். பணியாளர்கள் கூடுதல் வேலைகளை பார்க்க வேண்டி வரும். நன்மைகள் முயற்சியின்றி தாமதமாகவே கிடைக்கும்.

**மிதுனம்**
யாரை நம்புவது என்கிற குழப்பத்திற்கு ஆளாகித் தெளிவீர்கள். விடாப்பிடியாக முயன்று சில வேலைகளை முடிப்பீர்கள். பக்தி சிந்தனை கூடுதலாகும். பண வரவு உண்டு.

**கடகம்**
வழக்கத்தைவிட அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். குழப்பங்கள் அகலும். கூட்டு முயற்சி மகிழ்ச்சி தரும். அவசியம் ஏற்படுவதால் வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**சிம்மம்**
சிறிய பிரச்னை ஒன்று உருவாகிப் பிறகு சரியாகும். தடைகளை தாண்டி முன்னேறி உற்சாகம் அடைவீர்கள். உங்களுடைய செயல் ஒன்றால் குடும்பங்கள் இணையும்.

**கன்னி**
உங்கள் அஜாக்கிரதையால் விவாதம் வராமல் கவனம். முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். பொது வாழ்வில் ஈடுபாடு வரும். உங்களின் புகழ் கூடும்.

**துலாம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். பணியாளர்களிடையே இருந்து வந்த வீண் கசப்பு நீங்கும்.

**விருட்சிகம்**
விலை உயர்ந்த பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள். பங்குதாரர் பிரச்னை தீரும். உழைப்பால் உயர்வு காண்பீர்கள். மறுக்கப்பட்ட விஷயம் ஒன்று கிடைக்கும். கூடுதல் நன்மையை பெறுவீர்கள்.

**தனுசு**
முந்தைய பிரச்னைகளுக்கு புதிய தீர்வு காண்பீர்கள். வாழ்வில் தொல்லை கொடுத்து வந்தவர்கள் விலகுவர். சொத்துக்கள் வாங்குவதில் மிகுந்த கவனம் தேவை.

**மகரம்**
சவால் நிறைந்த பணி ஒன்றை நிறைவேற்றி வெல்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பகை நீங்கப் பெற்றுப் பாசமழை பொழிவார்கள். பிரச்னை கொடுத்து வந்த நபர் விலகிக் காணாமல் போவார்.

**கும்பம்**
நேற்றைய வருத்தங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். வீண் வம்புக்குப் போக வேண்டாம். உங்களின் திறமை கூடும். பொறுமையின்மையால் மனஸ்தாபம் ஏற்பட அனுமதிக்காதீர்கள்.

**மீனம்**
அனுபவமிக்க நபர்களின் ஆலோசனையால் முன்னேறுவீர்கள். தைரியம் கூடும். தனிப்பட்ட வாழ்வில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். சோர்வு நீங்கி துடிப்புடன் இயங்கி வெற்றி அடைவீர்கள்.

# இந்திய குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

## பா.ஜ.க., அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு

சென்னை, செப். 09

இந்தியக் குடியுரிமை திருத்தச் சட்டத்தை ரத்து செய்யக்கோரும் தீர்மானம் தமிழக சட்டப் பேரவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பா.ஜ.க., அ.திமு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.



தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி தனி தீர்மானத்தை முதல்வர் ஸ்டாலின் முன்மொழிந்தார். குடியுரிமை திருத்தச் சட்டம் மக்களை மத ரீதியாகப் பிரிக்கிறது என்பதால் இந்த சட்டத்தை ஆரம்ப நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பைத் தெரிவித்தது என்று கூறிய முதல்வர் , “இந்த சட்டம் நாட்டின் அரசியலமைப்பு சட்டத்திற்குக் குறிப்பாக மதச்சார்பற்ற தன்மைக்கு முற்றிலும் எதிரானது. இது நாட்டு நலனுக்கு உகந்தது அல்ல என்பதால் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தோம்.

அகதிகளாக வருபவர்களை சக மனிதர்களாகப் பார்க்க வேண்டும். மத ரீதியிலோ, இன ரீதியிலோ, எந்த நாட்டிலிருந்து வருவார்கள் என்ற ரீதியிலோ அவர்களைப் பிரித்துப் பார்க்கக் கூடாது என்பதுதான் சரியான பார்வையாக இருக்கும். சொந்த நாட்டில் வாழ முடியாமல் வேறு நாட்டுக்கு வருபவர்களைக் கூட மதம் பிரித்து பார்ப்பது அகதிகளுக்கு நன்மை செய்வது ஆகாது. அரசியல்ரீதியான பாகுபாட்டைச் சட்ட ரீதியான பாகுபாடாக உறுதிப்படுத்துவது மிகமிக தவறானது” எனத் தெரி வித்தார்.

இந்தத்தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ஜ.க. உறுப்பினர்கள் நான்கு பேரும் வெளிநடப்பு செய்தனர். இந்த தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு முன்னதாக சட்டப்பேரவையில் தங்களுக்குப் பேச அனுமதி அளிக்கப்படவில்லை என்று கூறி அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

# கவிஞர் புலமைப்பித்தன் காலமானார்

சென்னை, செப். 09

தமிழகத்தின் பிரபல கவிஞரும், பாடலாசிரியருமான புலமைப்பித்தன் உடல்நலக் குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 85. உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்களின் உதவியுடன் அவருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி புலமைப்பித்தன் உயிரிழந்தார்.



கடந்த வாரம் செவ்வாய்க் கிழமை அதிகாலை அவருக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் சென்னை அடையாறில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வயோதிகம் மற்றும் உடல் உறுப்புகளின் செயல்பாடு குறைவு ஏற்பட்டதால் அவருக்கு வெண்டிலேட்டர் சிகிச்சை அளிக்கப்பட்டது. தொடர் மருத்துவக் கண்காணிப்பில் இந்த வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் காலமானார்.

சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையிலிருந்து, அவரது உடல் நீலாங்கரையில் உள்ள இல்லத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. ராமசாமி என்ற இயற்பெயர் கொண்ட புலமைப்பித்தன், 1935ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6ஆம் திகதி கோவையில் பிறந்தவர். சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

பிரபல திரைப்படப் பாடலாசிரியராக அறியப்பட்ட புலமைப்பித்தன் தமிழக சட்ட மேலவையின் முன்னாள் துணைத் தலைவராகவும் இருந்தவர். காலத்தால் அழியாத திரைப் பாடல்களை எழுதியவர் புலமைப்பித்தன். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். நடிப்பில் வெளியான குடியிருந்த கோயில் திரைப்படத்தில் “நான் யார் நான் யார் நீ யார்?” என்ற பாடலின் மூலம் மக்கள் எல்லோருக்கும் தான் யார் என்று தெரியவைத்தவர் புலமைப்பித்தன்.

காலத்தால் அழியாத பல திரையிசைப் பாடல்களை எழுதிய புலமைப்பித்தன், நான்கு முறை தமிழக அரசின் சிறந்த பாடலாசிரியருக்கான விருதினைப் பெற்றவர். கடந்த 2015 ஆம் ஆண்டு வடிவேலு நடிப்பில் வெளியான ‘எலி’ படத்திற்காக தனது கடைசி பாடலை எழுதியிருந்தார்.

# சசிகலாவிற்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான சொத்துகள் முடக்கம்

சென்னை, செப். 09

சசிகலாவிற்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான சொத்துகளை வருமான வரித்துறை நேற்று அதிரடியாக முடக்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை அடுத்த பையனூரில் 22 ஏக்கரில் அமைந்துள்ள சசிகலாவுக்கு தொடர்பாக பங்களா சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியது. சசிகலா தொடர்புடைய பங்களாவை முடக்கி வருமான வரித்துறை அதிகாரிகள் அறிவித்தல் ஒன்றை ஒட்டியுள்ளனர்.

ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோருக்கு சொந்தமான 157 இடங்களில் வருமான வரித்துறை சோதனை செய்ததாகவும் இந்த சோதனையின் அடிப்படையில் பினாமி சொத்து சட்டத்தின் கீழ் சசிகலாவின் சொகுசு பங்களா முடக்கப்பட்டுள்ளதாகவும் வருமான வரித்துறை தகவல்



தரப்பிலிருந்து தகவல்கள் வெளிவந்துள்ளது

# வவுனியாவில் இரு நாள்களில் 16 பேர் தொற்றினால் மரணம்!

வவுனியா, செப். 09

வவுனியாவில் இரண்டு நாட்களில் 16 பேர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தனர் என சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளை பேணியவர்கள், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜென் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக கொரோனா தொற்று 178 நபர்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்களில் நேற்று முன்தினம் 10 பேர் மரணமடைந்தனர்.

இதேவேளை, கடந்த திங்கள் திடீர் சுகவீனமுற்ற நிலையில் அவர்களது வீடுகளில் மரணமடைந்த 6 பேரின் பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று முன் தினம் இரவு வெளியாகின. அவர்கள் 6 பேருக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களுடன் நேற்று முன் தினம் இரவு வெளியாகிய முடிவுகளின் அடிப்படையில் 16 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப் படுத்துவதற்கும் மரணித்த 16 பேருடைய உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்யவும் சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை குறித்து வத்திக்கானுக்கு விளக்குவார் மஹிந்த

## இத்தாலி பயணத்தின்போது இதற்கு ஏற்பாடு



**கொழும்பு, செப். 09**

**ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் விசாரணைகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் வத்திக்கான் உயர்பீடத்துக்கு இலங்கை அரசு தெளிவுபடுத்தவுள்ளது.**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இத்தாலி பயணத்தின்போதே இந்த தெளிவுபடுத்தல் வழங்கப்படவுள்ளது.**

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கையில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் திருப்தி இல்லை எனவும், எனவே, முறையான விசாரணை மூலம் நீதி கிடைக்காவிட்டால் சர்வதேசத்தை நாடவேண்டிவரும் என பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எச்சரிக்கை விடுத்திருந்தார். அத்துடன், வத்திகானிலுள்ள பாப்பரசருக்கும் இது தொடர்பில் கடிதம் அனுப்பப்படும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே வத்திக்கான் உயர்பீடத்துக்கு விசாரணை தொடர்பில் விளக்கமளிப்பதற்கு இலங்கை திட்டமிட்டுள்ளது.

அதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இத்தாலி பயணத்தின்போது ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் தற்போதைய நிலைமை தொடர்பிலும் தெளிவுபடுத்தல் வழங்கப்படவுள்ளது என்பதை அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண உறுதிப்படுத்தினார்.

இத்தாலியின் போலோக்னா பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் பங்கேற்று, ஆரம்ப நிகழ்வில் உரையாற்றுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்காக பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் இத்தாலி செல்லவுள்ளனர்.

இவ்விஜயத்தின்போது இத்தாலி பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் சபாநாயகர் ஆகியோரை சந்திப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஏனைய சில இராஜதந்திர சந்திப்புகளும் இடம்பெறவுள்ளன. (அ)

# 13ஆம் திகதிக்கு பிறகும் ஊரடங்கு நீடிக்கப்படுமா?

## வெள்ளி முடிவு அறிவிப்பு

கொழும்பு, செப். 09

நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு பின்னரும் நீடிக்கப்படுமா என்பது தொடர்பில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தீர்மானம் எடுக்கப்படும் என தெரிய வருகின்றது.

கொரோனா ஒழிப்பு செயலணியின் வாராந்த மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை கூடவுள்ளது.

இதன்போதே நாட்டின் தற்போதைய நிலைமை மீளாய்வு செய்யப்பட்டு, ஊரடங்கு தளர்த்தப்படுமா அல்லது நீடிக்கப்படுமா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை ஒக்ரோபர் 2 ஆம் திகதிவரை நீடிக்குமாறு மருத்துவ சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் மீனவரின் துண்டாடப்பட்ட கை வெற்றிகரமாக மீள பொருத்தல்

யாழ்ப்பாணம், செப். 09

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நிலையில் தவறி விழுந்து படகின் காற்றாடியில் சிக்கி கையை இழந்தவருக்கு அதனை வெற்றிகரமாக பொருத்தியுள்ளனர் யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ நிபுணர்கள்.

யாழ். போதனா வைத்தியசாலையின் பிளாஸ்ரிக் சத்திர சகிச்சை நிபுணர் மருத்துவர் இளம்செழியபல்லவன் உள்ளிட்ட மருத்துவர்களால் இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

பருத்தித்துறையில் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மன்னாரைச் சேர்ந்த மீனவர் ஒருவர், நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை தவறுதலாக கடலில் விழுந்த நிலையில் அவரது வலது கை, வலது கால் என்பன வள்ளத்தின் காற்றாடியின் சிக்குண்டு சிதைந்தது.

இந்நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில், மருத்துவர்களால் கை மீள பொருத்தப்பட்டது.

சுமார் 5 மணித்தியாலங்கள் இந்த சத்திர சிகிச்சை இடம்பெற்றது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 9,672 பேர் செவ்வாயன்று தடுப்பூசி பெற்றனர்!

கிளிநொச்சி, செப். 09

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 9,672பேர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டனர் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 418 பேர் முதலாவது தடுப்பூசியும், 4,403 பேர் இரண்டாவது தடுப்பூசியும் பெற்றனர்.

கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 170பேர் முதலாவது தடுப்பூசியையும், 2,228 பேர் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுள்ளனர்.

பூநகரி சுகாதார மருத்துவ



அதிகாரி பிரிவில் 187பேர் முதலாவது தடுப்பூசியும், 1,671பேர் இரண்டாவது தடுப்பூசியும் பெற்றுள்ளனர்.

பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 45பேர் முதலாவது தடுப்பூசியும், 550பேர் இரண்டாவது தடுப்பூசியும் பெற்றுள்ளனர்.

மொத்தமாக, நேற்று முன் தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் 820பேர் முதலாவது தடுப்பூசியையும், 8,852பேர் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மாவட்டத்தில் 566பேர் முதலாவது தடுப்பூசியும், 8974பேர் இரண்டாவது தடுப்பூசியும் பெற்றிருந்தனர். இரண்டாவது தடுப்பூசி பெறுவோரின் எண்ணிக்கை முதலாவது நாளை விட இரண்டாவது நாள் 566 இலிலிருந்து 820 ஆக அதிகரித்திருப்பது, இதுவரை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்களிடம் ஏற்பட்டுள்ள மனமாற்றத்தைக் காட்டுகிறது.

இதே போக்கு நீடித்தால் இம்முறை தடுப்பூசி வழங்கலுடன், இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கி விடலாம்-என்றார். (அ)

# நில அதிர்வு குறித்து ஆராய விசேட குழு

கொழும்பு, செப். 09

லுணுகம்வெஹெர பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பதிவான சிறு நில அதிர்வு தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்காக மொனராகலை அலுவலக அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அனுர வல்பொல தெரிவித்தார்.

லுணுகம்வெஹெர பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 10.38 மணியளவில் 2.4 மக்னிரியூட் அளவில் சிறு நில அதிர்வு பதிவாகியமை குறிப்பிடத்தக்கது.

# வளர்ப்பு நாயை அடகு வைத்த இருவர் கைது

கொழும்பு, செப். 09

வீடொன்றில் இருந்த வளர்ப்பு நாயை திருடி அதை 7,500 ரூபாய்க்கு அடகு வைத்த சம்பவமொன்று பலாங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பலாங்கொடை கிரிமெடி தென்ன பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய அடகு வைக்கப்பட்ட வளர்ப்பு நாய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் பலாங்கொடை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டனர் என பொலிஸார் மேலும் கூறினர்.

# வவுனியா விபத்தில் இருவர் உயிரிழப்பு

வவுனியா, செப். 09

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை பிக்கப் வாகனமும், டிப்பரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.

வவுனியாவில் இருந்து ஏ-9 வீதி ஊடாக பயணித்த பிக்கப் வாகனமும் வவுனியா நோக்கி வந்த டிப்பர் வாகனமும் கனகராயன்குளம் சந்திக்கு அண்மையில் கட்டுப்பாட்டை இழந்து நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் இருவர் உயிரிழந்தனர். அத்துடன் இருவர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் குறித்து கனகராயன்குளம் போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் ஆறு வாரங்களுள் தடுப்பூசி ஏற்றல்!

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவிப்பு



கொழும்பு, செப். 09

**ஆறு வாரங்களுக்குள் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்கும் பணி நிறைவுற்றிருக்குமென இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.**

**பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டாரவால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்-

நாட்டில் பல கிராம சேவகர் பிரிவுகளுக்கு தடுப்பூசிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கிறோம்.

சினோபார்ம் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதில் சில தாமதங்கள் ஏற்பட்டன. சீனாவில் கொவிட் தொற்றாளர்கள் அதிகரித்திருந்தமையால் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே இந்த மாவட்டங்களுக்கு தடுப்பூசிகளை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.

என்றாலும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் 4 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றதால் தடுப்பூசி வழங்கும் பணிகள் மீண்டும் தாமதமின்றி முன்னெடுக்கப்படுகின்றன. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் சினோபார்ம் தடுப்பூசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு உரிய வகையில் தடுப்பூசிகள் கிடைத்துவிடும்.

அதேபோன்று மாவட்ட மட்டத்தில் தரவுகளைப் பெற்றுக்கொடுக்கும் பணிகள் மாவட்ட செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தரவுகளை பெற்றுக்கொடுப்பதில் காணப்பட்ட சில சிக்கல்கள் காரணமாகவும் தடுப்பூசி வழங்கும் பணியில் தாமதம் ஏற்பட்டிருந்தது. 2012ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின் பிரகாரம்தான் தரவுகள் சேகரிக்கப்பட்டிருந்தன.

ஆனால், தற்போது சனத்தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதால் தரவுகள் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்திருந்தன. இக்குறைப்பாடுகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் தடுப்பூசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணி நிறைவுற்றிருக்கும்.

அரசாங்கத்தின் முதல் இலக்கு 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசியை வழங்குவதாகவே இருந்தது. அதன் பின்னர் 30முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடுப்பூசியை வழங்குவது இலக்காக இருந்தது.

அந்தப்பணியும் இறுதிகட்டத்தை எட்டியுள்ள நிலையில் 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடுப்பூசியை வழங்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆறுவாரங்களுக்குள் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணியை இறுதி செய்வதே அரசாங்கத்தின் அடுத்த இலக்காகும்.

இளையோருக்கு வழங்கப்படும் தடுப்பூசிகளின் வகைகள் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இவர்களுக்கு எந்தவொரு தடுப்பூசியையும் வழங்க முடியுமென உலகளாவிய ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளது. வெளிநாடு செல்பவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

(அ)

# இலங்கைக்கு சுற்றுலா செல்லாதீர்! அமெரிக்கா அவசர எச்சரிக்கை

நியூயோர்க், செப். 09

தற்போது பரவிவரும் கொரோனா வைரஸ் திரிபால் ஏற்படும் அச்சுறுத்தல் காரணமாக இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்வதை தவிர்க்குமாறு அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையம் அறிவித்துள்ளது.

அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, ஜமேய்க்கா, புரூனே ஆகிய நாடுகள் கொரோனா அச்சுறுத்தல் அதிகம் உள்ள 4 ஆம் கட்ட அபாய வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்த நாடுகளுக்கு சுற்றுலா மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னாரில் மேலும் இரு பெண்கள் கொரோனா தொற்றினால் மரணம்!

மன்னார், செப். 09

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்று அதிகாலை மேலும் 2 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

இவர்களுடன் சேர்த்து மன்னார் மாவட்டத்தில் 22 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று முன்தினம் இரவு 72 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.இவர் தடுப்பூசி எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை. நேற்று அதிகாலை உயிரிழந்தவர் 78 வயதுடைய பெண்.இவர் அண்மையில் தடுப்பூசி ஒன்றை பெற்றுக் கொண்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 22 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்தில் புதிதாக 31 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் 1806 கொரோனாத் தொற்றாளர்களும், மன்னார் மாவட்டத்தில் இதுவரை 1823 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று முதல் மன்னார் மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முசலி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், முருங்கன் டொன் பொஸ்கோ தொழில் பயிற்சி நிலையம், மற்றும் இரணை இலுப்பைக்குளம் ம.வி பாடசாலை ஆகியவற்றில் தடுப்பூசி வழங்கப்பட்டது.

இன்று மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, நானாட்டான் டிலாசார் பாடசாலை,மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மறிச்சிக்கட்டி அல் ஜெசிரா பாடசாலை மற்றும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றில் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும் - என்றார்.

# யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 09

எதிர்வரும் 16,17,18 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த யாழ்.பல்கலைக்கழக 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி தற்போதைய கொரோனா பெருந்தொற்று நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அடுத்த மாதம் 7ஆம்,8ஆம்,9 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடகப் பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடகப்பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியை இந்த மாதம் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் குழு நேற்று புதன்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் கூடியது.

தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராய்ந்த குழு, நாட்டின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பட்டமளிப்பு விழாவை அடுத்த மாதம் 07 ஆம் திகதி முதல் 09ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

எனினும் சூழ்நிலைகளைப் பொறுத்து குறித்த தினங்களில் பட்டமளிப்பு விழாவைத் திட்டமிட்டபடி பட்டதாரிகளுடன் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டால் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி பட்டங்களை உறுதிப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலைக்கு மாற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானம் இம்மாதம் 23ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடக்கில் ஒரு வாரத்தில் 106 பேர் தொற்றால் பலி!

## 4,083 தொற்றாளர்கள் அடையாளம்

யாழ்ப்பாணம், செப். 09

வடக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வாரத்தில் 4 ஆயிரத்து 83 கொவிட்-19 நோய்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 106 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் துறையின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

வடக்கு மாகாணத்தில் கொவிட்-19 நோயினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 515ஆக உயர்வடைந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் நேற்று முன் தினம் 569 பேர் கோரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 246 பேரும் வவுனியாவில் 160 பேரும் கிளிநொச்சியில் 99 பேரும் முல்லைத்தீவில் 39 பேரும் மன்னாரில் 31 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாகாணத்தில் நேற்று முன்தினம் 22 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர். வவுனியா மாவட்டத்தில் மட்டும் 16 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் 5 பேரும் முல்லைத்தீவில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

செப்ரெம்பர் மாதத்தின் முதல் ஏழு நாள்களில் வடக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்து 83 கொவிட் - 19 நோய்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 106 பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 724 தொற்றாளர்களும் வவுனியாவில் ஆயிரத்து 56 தொற்றாளர்களும் கிளிநொச்சியில் 889 தொற்றாளர்களும் முல்லைத்தீவில் 275 தொற்றாளர்களும் மன்னாரில் 139 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் வவுனியா மாவட்டத்தில் 45 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 43 பேரும் கிளிநொச்சியில் 9 பேரும் முல்லைத்தீவில் 8 பேரும் மன்னாரில் ஒருவரும் கொவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் 2020 மார்ச் தொடக்கம் டிசெம்பர் வரை வவுனியா மாவட்டத்தில் ஒருவர் மட்டுமே கொவிட்-19 நோயினால் உயிரிழந்தார். எனினும் நேற்று முன்தினம் 515 பேர் கொவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். ஓகஸ்ட் மாதத்தில் அதிகப்படியாக 228 பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் அதிகப்படியாக 303 பேரும் வவுனியா மாவட்டத்தில் 119 பேரும் கொவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். கிளிநொச்சியில் 45 பேரும் முல்லைத்தீவில் 28 பேரும் மன்னாரில் 20 பேரும் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் வரை 30 ஆயிரத்து 912 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் யாழ். மாவட்டத்தில் 14 ஆயிரத்து 474 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 635 பேரும் வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 788 பேரும் முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 192 பேரும் மன்னாரில் ஆயிரத்து 823 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(அ)

# யாழ்.குடாநாட்டில் மூன்று வாரங்களுள் 53 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

## அரச அதிபர் மகேசன் தகவல்



யாழ்ப்பாணம், செப். 09

**யாழ்.மாவட்டத்தில் அதிக விலைக்கு பொருள் விற்றல், காலாவதியான பொருள் விற்றல் போன்ற குற்றச்சாட்டுகளில் கடந்த மூன்று வாரங்களாக 53 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று முன்தினம் மட்டும் 8 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக நீதிமன்ற நடைமுறையில் சற்று தாமதம் காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் தொடர்ச்சியாக பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையினரால் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றன.

அதனுடன் இணைந்த வகையிலே நிறுத்தல் மற்றும் அளவைகள் திணைக்களமும் தங்கள் பணியாளர்களை களப் பணியில் ஈடுபடுத்தி பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

மேலும் நடைபாதை வியாபார நிலையங்களும் நடமாடும் விற்பனை வண்டிகளும் பரிசோதனை செய்யவுள்ளன.

எனவே வியாபாரிகள் மிகவும் விழிப்புணர்வுடன் பொதுமக்களுக்கு சகாய விலையில் பொருள்களை விற்பனை செய்ய வேண் டும். அதிக விலைக்கு விற்பனை செய்து பிடிபட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்தோடு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையுடன் இணைந்த வகையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 5 பட்டதாரிப் பயிலுநர்களுடன் இணைந்து இப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு நாளாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

குறிப்பாக சீனி, அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பான விற்பனை நிலை தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினத்தில் இருந்து மிகவும் இறுக்கமான முறையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது - என்றார்.

(அ-3)

# மருத்துவ நிபுணர் ருக்ஷான் பெல்லன அவசர சிகிச்சை பிரிவில் அனுமதி

கொழும்பு, செப். 09

அரச மருத்துவ அதிகாரிகள் பேரவையின் தலைவரும், களுபோவில வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளருமான மருத்துவ நிபுணர் ருக்ஷான் பெல்லன, அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் வைரஸ் தொற்று உறுதியானது. இதனையடுத்து கொரோனா சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

நோய்த் தாக்கம் தீவிரமானதாலேயே அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.



# உரம் கடத்திய இருவர் கைது!

கொழும்பு, செப். 09

எம்பலப்பிட்டியில் இருந்து அம்பாறை நிந்தவூர் பிரதேசத்துக்கு 350 உரப்பை மூடைகள் கொண்ட உரத்தை கடத்திச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை சந்தேக நபர்களை அம்பாறை மாவட்ட குற்ற விசாராணைப் பிரிவு பொலிஸார் கைது செய்து ஒப்படைத்துள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

'அத்தியாவசிய சேவைகள்' என்ற பெயர் பலகை ஒட்டப்பட்ட லொறியிலேயே உர மூடைகள் கடத்தப்பட்டுள்ளன.

மேலும், அதில் சட்ட விரோதமாக தலா 50 கிலோ கிராம் கொண்ட 350 உரப்பை மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், லொறியையும் அம்பாறை மாவட்ட குற்ற விசாராணைப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# அத்தியாவசிய பொருள்களை வீடுகளுக்கு விநியோகிக்கும் திட்டம் திங்கள் ஆரம்பம்

கொழும்பு, செப். 09

அத்தியாவசிய பொருள்களை சிறப்பு சலுகை விலையில் வீடுகளுக்கு விநியோகிக்கும் திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும் என கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கு அமைவாக நடமாடும் விற்பனையாளர்களுக்கு மரங்கறிகள், பழங்கள் மற்றும் மீன் போன்ற அத்தி யாவசியப் பொருள்களை புதிய பேலியகொடை மனிங் சந்தை மற்றும் மத்திய மீன் சந்தையில் இருந்து பெற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

(அ)

# மற்றொரு வைரஸ் திரிபு நாட்டுக்குள் வர வாய்ப்பு

## சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே கூறுகிறார்



கொழும்பு, செப். 09

அமுல்படுத்தப்பட்ட பயணக்கட்டுப்பாடுகளின் மூலம் கொரோனா திரிபை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும், மற்றொரு திரிபு நாட்டுக்குள் வருவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

இந்நிலையில், மக்கள் கொரோனாவுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், இந்த சந்தர்ப்பத்தில் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதை விடுத்து, அரசியல் பேதங்களை மறந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்காக ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

(அ)

# வவுனியாவில் வாரத்துக்கு 45 மரணங்கள் ஆயினும் தொடர்ந்தும் மக்கள் அசமந்தம்

வவுனியா, செப். 09

வவுனியாவில் இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மாத்திரம் 45 மரணங்கள் சம்பவித்துள்ள நிலையில் கொரோனா மரணங்கள் தொடர்பில் மக்கள் தொடர்ந்தும் அசமந்தமாக இருப்பதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் கொரனா மரணங்களின் அதிகரிப்பு தொடர்பில் அவர்களிடம் கேட்டபோதே இவ்வாறு கூறினர்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த சுகாதார தரப்பினர்,

வவுனியாவில் கொரோனா மரணங்கள் நாளுக்குநாள் மிக வேகமாக அதிகரித்து செல்கின்றன. ஒரு வாரத்துக்கு ஒரு மரணம் என இருந்த நிலையில் கடந்த வாரம் 45 மரணங்கள் சம்பவித்துள்ளன.

நாட்டில் ஏற்படும் மரண வீதத்தில் வவுனியாவில் மரணிப்போரின் தொகை பாரியளவில் காணப்படுகின்றது.

வவுனியாவில் மக்களின் அசமந்தமான செயல்பாட்டால் மரணத் தொகை கட்டுக்கடங்காமல் செல்கின்றது. எனினும் மக்கள் இதன் பாரதூரமான தன்மையை உணரவில்லை. இது பெரும் ஆபத்தான நிலைப்பாடாக உள்ளது.

இதேவேளை, தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்த்து சமூக இடைவெளியை பின்பற்றுங்கள். மக்கள் அதிகளவில் ஒன்றுகூடுவதானது தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் புதிய கொரனா கொத்தணிகளை உருவாக்கிவிடலாம்.

வவுனியா மக்களுக்கு தேவையான தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளாதால் அனைவருக்கும் தடுப்பூசிகள் வழங்கப்படும் என்பதை மனதில் கொண்டு ஒரே தடவையில் ஊசி ஏற்றும் நிலையங்களில் கூடுவதை தவிர்க்கவேண்டும்-என்றனர்.

(அ)

# கோவிட் ஒழிப்பு தொழில்நுட்ப குழுவுக்கு விடைகொடுத்தார் மூன்றாவது மருத்துவர்

கொழும்பு, செப். 09

கொரோனா ஒழிப்பு தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலகுவதாக விசேட மருத்துவர் அசோக குணரத்ன அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் குறித்த குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு அவர் நேற்று முன்தினம் அறியப்படுத்தியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் தடுப்பூசி செலுத்தும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தக் குழுவிலிருந்து விலகுவதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக பேராசிரியர் நீலிகா மலவிகே மற்றும் விசேட மருத்துவர் ஆனந்த விஜயவிக்ரம ஆகியோர் இந்த குழுவிலிருந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் மூவர் கைது

கொழும்பு, செப். 09

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கஜ்பா மாவத்தையில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 22 கிராம் 90 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 28 மற்றும் 49 வயதுடையவர்கள் என்றும் அவர்கள் அநுராதபுரத்தில் வசித்து வருபவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, பியகம கொடுவத்த பிரதேசத்தில் 10 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 36 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பியகம பொலிஸார் தெரிவித்தனர்.

**மறைந்த மங்கள சமரவீர தனது ‘நல்லாட்சிக’ காலத்தில் சர்வதேசப் பொறிமுறைகளுடன் இணைந்து இயங்குவதாக வாக்குறுதி வழங்கிவிட்டு, நடைமுறையில், உள்ளகப் பொறிமுறையை மட்டுமே செயல்படுத்தும் உத்தியைக் கையாண்டிருந்தார். ஆனால், அமைச்சர் பீரிஸ்....**






அ.நிக்ஸன்

# மங்கள பாணியில் அமைச்சர் பீரிஸ் ஜெனிவாவுக்கான புதிய உபாயம்!

பேராசிரியர் ஜீ. எல். பீரிஸை அமைச்சராகக் கொண்டியங்கும் வெளிநாட்டமைச்சு ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகருக்குக் கடந்த 27ஆம் திகதி தான் சமர்ப்பித்த மனித உரிமை மற்றும் உள்நாட்டுப் பொறிமுறை தொடர்பான புள்ளிவிபரங்கள் உள்ளடங்கிய அறிக்கையிடலின் பதின்மூன்று பக்கச் சுருக்கத்தை கொழும்பில் இருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு 31ஆம் திகதி அனுப்பிவைத்திருக்கிறது.

உள்நாட்டுப் பொறிமுறைகள் மிகவும் சீராக இயங்குவதான தோற்றப்பாட்டைக் கொடுக்கும் வகையில் 14 தலைப்புகளில் 25 புள்ளிகளில் கனகச்சிதமாக அவ்வறிக்கை எழுதப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகர் இதைப் பார்த்து வியந்து போயிருக்கிறாரென பிரித்தானியாவை மையமாகக் கொண்டியங்கும் தகவலறிந்த மனித உரிமைச் செயல்பாட்டாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையிடல் மூலம் கடந்த காலத்தில் நல்லாட்சி என்ற பெயரில் இயங்கிய மைத்திரி- ரணில் அரசாங்கம் எந்தவகையில் ஐ.நா. பொறிமுறைகளுடன் ஒத்து இயங்கியதோ அதே அளவிலே தாமும் இயங்கப்போவதான ஒரு செய்தியை சர்வதேச சமூகத்திற்கு நுட்பமாக பீரிஸ் வெளியிட்டிருக்கிறாரென ஜெனீவா மனித உரிமை வட்டாரங்கள் கருத ஆரம்பித்துள்ளன.

இதனால் எதிர்வரும் 13ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் வாய்மூல அறிக்கையிடலை மேற்கொள்ளவிருக்கும் மிச்சல் பச்சலேற் அம்மையார் தனது கடும் தொனியை மிகவும் குறைத்த ஒரு நிலையிலேயே கருத்து வெளியிட இருப்பதாகவும் குறித்த வெளிநாட்டு மனித உரிமைச் செயல்பாட்டாளர் தனது பெயரைக் குறிப்பிடவேண்டாம் என்ற வேண்டுகோளுடன் கொழும்பில் இருக்கும் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

கொரோனாப் பேரிடரின் மத்தியிலும் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கச் செயல்பாடுகள் உள்நாட்டுப் பொறிமுறைகள் ஊடாகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருப்பதாக காட்டும் விதத்தில் புள்ளிவிபரங்கள், பணத் தொகை மற்றும் நில அளவுகளை கொழும்பின் வெளிநாட்டமைச்சு புள்ளிவிபரங்கள் மற்றும் எண்கள் ஊடாக முன்வைத்திருக்கிறது.

அதேவேளை, கொழும்பில் நிலைபெற்றிருக்கின்ற அனைத்து இராஜதந்திர பணிமனைகளுடனும் தமது “உயர் உத்தரவாதத்தைப் புதுப்பித்துக்” கொள்வதாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள அறிமுகக் கடிதம் தெரிவித்துள்ளது.

தமிழ்ச் செயல்பாட்டாளர்கள் இந்த அறிக்கைக்கு உரிய பதிலை விரைந்து தெரிவிக்கத் தவறும் பட்சத்தில் பச்லெற் அம்மையார் தழுவியிருக்கும் மென்போக்கை மாற்றுவது மிகவும் சிரமமாக இருக்கும் என்றும் முன்னை நாள் ஊடகவியலாளரான அந்தப் பிரபல மனித உரிமைச் செயல்பாட்டாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

மறைந்த மங்கள சமரவீர தனது ‘நல்லாட்சி’ காலத்தில் சர்வதேசப் பொறிமுறைகளுடன் இணைந்து இயங்குவதாக வாக்குறுதி வழங்கிவிட்டு, நடைமுறையில், உள்ளகப் பொறிமுறையை மட்டுமே செயற்படுத்தும் உத்தியைக் கையாண்டிருந்தார்.

ஆனால், பீரிஸ் உள்ளகப் பொறிமுறை ஊடாக வெளியகப் பொறிமுறைக்கு ஒப்பாகச் செயல்பட முடியும் என்று நிறுவ முற்படுவது போலவும், சர்வதேச அழுத்தங்களைத் தாம் உணருவது போலவும் தனது அறிக்கையிடலை வடிவமைத்திருக்கிறார்.

நடைமுறையில் இரண்டும் ஒரே அணுகுமுறையின் தொடர்ச்சியாகவே தெரிகிறது என்று குறித்த அறிக்கையை முழுவதுமாக வாசித்த ஒரு தமிழ் மனித உரிமைச் செயற்பாட்டாளர் கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார்.

மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆக்கபூர்வமான செயற்பாடுகள் என்ற தலைப்பில் ஜெனீவாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பு நியாயப்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான தீர்வு இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் இருந்து மேற்கொள்ள முடியாதென்ற வாதம் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், மூன்று வழிகளில் தனது ஒற்றையாட்சியை கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இந்த அறிக்கையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் நியாயப்படுத்தியிருக்கிறது.

2015 ஆம் ஆண்டு மைத்திரி- ரணில அரசாங்கம் கையாண்ட அதே உத்தியைக் கையெலடுத்துக் குறிப்பாக அந்த அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த மங்கள சமரவீர கையாண்ட அணுகுமுறைகளில் இருந்து சற்றும் விலகாமல் அந்த மூன்று வழிகளை அரசாங்கம் பயன்படுத்தியிருக்கிறது.

ஒன்று- இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மூலமாக விசாரணைச் செயல்பாடுகளும் அதன் மூலமான நீதிமன்ற விசரணைகளையும் அரசாங்கம் நியாயப்படுத்தி உறுதிப்படுத்துகின்றது.

இரண்டாவது- தமிழ்க் கட்சிகள், தமிழ் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடனான செயற்பாடுகள். குறிப்பாகக் காணிகளைக் கையளித்தல் என்பது தமிழ் அதிகாரிகளின் செயற்பாடகக் காண்பிக்கப்பட்டுள்ளதோடு தமிழ்க் கட்சிகள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தன என்பதாகும்.

அதாவது 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில் அரசாங்கத்தின் எந்தவொரு செயற்பாட் டுக்கும் தமிழ்க் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்குகின்றன என்பதன் மூலமாக இலங்கை ஒற்றையாட்சிக் கட்ட மைப்பைத் தமிழர்கள் ஏற்றுள்ளனர் என்ற செய்தி வெளியிடப்படுகின்றது.

மூன்றாவது- எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஜெனிவா மனித உரிமைகள் சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக இலங்கை ஒத்துழைத்துச் செயற்படுகின்றது என்ற சர்வதேசத்துக்கான நம்பிக்கையும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஆகவே இந்த மூன்று வழிமுறைகளையும் ராஜபக்ஷ அரசாங்கம் வெளிப்படுத்தியதன் மூலம் வடக்குக் கிழக்கு மற்றும் தமிழ் மக்கள் என்ற சொல்லாடல்கள் அவதானமாகத் தவிர்க்கப்பட்டிக்கின்றன. ஒட்டுமொத்த இலங்கை மக்களின் மனித உரிமைப் பிரச்சினையாகவும் அதற்கான தீர்வு என்ற கோணத்திலும் நடந்தது போர் அல்ல, அது மக்களை மீட்கும் பணி என்றே எண்ணத் தோன்றும் வகையிலும் அந்த அறிக்கையின் சொல்லாடல்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. ■

# ஆப்கான் எழுப்பும் கேள்விகள்

சி.ஆன்றணி விஜிலியஸ்

ஆப்கானிஸ்தானின் நிலவரத்தை உற்றுநோக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு, தலிபான்களால் கெரில்லா போர் வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, ஒரு அரசாங்கத்தை நிறுவி அதனை நடத்த முடியுமா என்ற கேள்வி எழுவது இயல்பே. இதற்கு விடை காண்பதற்குக் குறைந்தபட்சம் 6 மாதங்கள் நாம் காத்திருக்க வேண்டும். அதே வேளையில், பயங்கரவாதத்தால் ஒரு ஜனநாயக அரசு வீழ்த்தப்பட்டு, மாறுபட்ட ஓர் அரசை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழலானது, வருங்காலங்களில் இவ்வகையான அரசியல் முறைகள் அனைவருக்கும் ஏற்புடையதாகிவிடக் கூடும் என்ற அச்சத்தை எழுப்புகிறது.

'சர்வதேச சட்டங்களுக்குப் பற்கள் உண்டு; ஆனால் கடிப்பதில்லை' என்ற பழமொழி மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் தாலிபான்களுக்கு எதிர்வினை ஆற்றிவரும் முந்தைய வடக்குக் கூட்டணியானது, இன்றும் தாலிபான்களுக்குப் பணியாமல் சவால்களைச் சந்தித்துவருகிறது. இந்தச் சூழலில் பஞ்ஷீர் பள்ளத்தாக்கில் உள்ளவர்கள் மிகப் பெரிய மனித உரிமை மீறல்களைச் சந்திக்கப் போகிறார்கள் என்ற குரல்கள், உலகின் சக்திமிகுந்த நாடுகளின் காதுகளையோ ஐ.நா. சபையின் வாசல்களையோ எட்டவில்லை என்பது வெட்கக் கேடு.

ஆப்கானிஸ்தானில் அரசு அமையும் முன்பு, அதனை உடனடியாக ஏற்றுக் கொள்ளும் பாகிஸ்தான் அரசுக்கு அந்த நாட்டுக்குள்ளிருந்தே கண்டனக் குரல்கள் எழுகின்றன. சீனாவின் முதலீடு ஆப்கானிஸ்தான் வளர்ச்சிக்கு என்ற பிரசாரத்தை சீனா ஆரம்பித்துவிட்டது. அமெரிக்கப் படைகள் ஆப்கனிலிருந்து வெளியேறியதையும், தலிபான்கள் மீண்டும் ஆப்கனை ஆட்சி செய்வதையும் ரஷ்யா தனக்குக் கிடைத்த மறைமுக வெற்றியாகத்தான் பார்க்கிறது.

இப்படி இருக்கும்போது அங்குள்ள பெண்கள், குழந்தைகளின் நிலை, தொழில், வேலைவாய்ப்பு, பொருளா தாரம், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு இவற்றையெல்லாம் யார் சிந்தித்துப் பார்க்கப்போகிறார்கள் அகதிகளாக அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பிச் சென்றோரின் எதிர்காலம் என்ன என்பது போன்ற கேள்விகள் நீண்டுகொண்டே செல்கின்றன.

ஆப்கானிலிருந்து வரும் தகவல்கள் உண்மையாக இருக்குமேயானால், பெண்களுக்கும் முந்தைய அரசாங்கத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்களுக்கும் எதிர்காலம் நம்பிக்கைக்குரியதாகத் தெரியவில்லை. பலதரப்பட்ட போராளிக் குழுக்கள் ஒற்றைத் தலைமையின் கீழ் ஆப்கானின் மேம்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் தோள்கொடுப்பார்களா என்பது இன்னொரு கேள்வி.

தலிபான்கள் தங்களை நேர்மறையாகக் காட்டிக்கொள்வது, அவர்கள் மாறுபட்ட அரசாங்கத்தைத் தருவார்கள் என்ற எதிர்பார்ப்பைச் சர்வதேசச் சமூகத்திடம் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் அமெரிக்கா, ஏனைய மேற்கத்திய நாடுகள் போன்றவற்றைச் சேர்ந்த ராணுவத் தளபதிகளும் சர்வதேச வெளியுறவுத் துறை வட்டாரமும் இதை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். இதற்குக் காரணம், தாலிபான்கள் தலைநகர் காபூலை நெருங்கியவுடன் உலகமே பதற்றத்துடன் ஆப்கனைப் பார்த்தது. அங்குள்ள மக்கள் எப்படியாவது இங்கிருந்து தப்பி ஓடிவிட வேண்டும் என்று எடுத்த முயற்சிகள், தங்கள் குழந்தைகளையாவது காப்பாற்றிவிட வேண்டும் என்ற பதற்ற நிலை நம் கண்ணை விட்டு அகல மறுக்கின்றன. பொது மன்னிப்புக்கான தாலிபான்களின் அழைப்பு, அமைதிக்கான வெளியுறவுக் கொள்கை இவையெல்லாம் நமக்கு நம்பிக்கை கொடுப்பதாக இருந்தாலும், சொன்ன சொல்லைத் தலிபான்கள் எப்படிக் காப்பாற்றுவார்கள் என்று தெரியவில்லை.

தங்கள் மண்ணை வேறு எந்த நாட்டுக்கு எதிராகவும் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்ற தலிபான்களின் அறிவிப்பு வரவேற்கக் கூடியதுதான்.



> **ஆப்கானிஸ்தானின் அரசியல் நிலை சீராகும் வரை காத்திருக்கும் அணுகுமுறையை இந்தியா பின்பற்றுமேயானால், அங்குள்ள அரசியல் களத்தில் பாகிஸ்தானும் சீனாவும் நன்றாகக் காலூன்றிவிடும். பின்பு, நமக்கு அங்கு வேலை இல்லை என்ற நிலை பெரும் ஆபத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடியது.**

ஆனால், காஷ்மீர் பற்றிய அவர்களின் கருத்துதான் இந்தியாவுக்கு அச்சமூட்டுகிறது. பாகிஸ்தான், தலிபான்கள் ஆளும் ஆப்கன், சீனா ஆகியவற்றின் நெருக்கமான நட்புறவு எதிர்வரும் காலங்களில் இந்தியாவுக்கு நிரந்தர அச்சுறுத்தலாகவே அமைந்திருக்கும்.

அரசு அமைப்பதற்கான தலிபான்களின் முயற்சிக்குப் புதிய சவால்கள் அவர்களுக்குள்ளிருந்தே எழுந்துள்ளதன் வெளிப்பாடுதான், அவர்கள் புதிய அரசை அமைப்பதற்குக் காலதாமதமாவது. அவர்களுடைய ஆட்சியமைக்கும் முயற்சிக்கு இந்தியா உடனடியாக வாழ்த்துத் தெரிவிக்காவிட்டாலும், ரஷ்யாவின் துணையுடன் இந்தியா, தலிபான்களுடன் தொடர்பில் இருந்த மையால், கத்தார் தலைநகர் டோஹா வில் அவர்களுடன் முதல் கட்டப் பேச்சுவார்த்தை நடத்த வழி ஏற்பட்டது. இதில் என்னென்ன பேசப்பட்டன, என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதெல்லாம் பொதுவெளியில் அறிவிக்கப்படாவிட்டாலும் பேச்சு நடந்ததை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

ஆக, வெளியுறவுத் துறையில் நெறிமுறைகளைப் பின்பற்றும்விதத்தில் கொள்கை வகுப்பது அல்லது நெறிமுறைகளைப் பின்பற்றுவது என்பது சவாலானது என்பதை இதன் மூலம் அனைவரும் உணர வேண்டும். இந்தியாவின் அணுகுமுறை எந்த அளவுக்கு நன்மை தரும் என்பதில் ஐயப்பாடு ஏற்படுகிறது. காரணம், தலிபான்களுக்கு எதிரான யுத்தத்தில் இந்தியா நேரடியாகத் தலையிடாவிட்டாலும் ஆப்கனின் சமூக முன்னேற்றம், உள்கட்டமைப்பு வளர்ச்சி போன்றவற்றுக்கு நாம் பெரிய பங்களிப்பு செய்துள்ளோம் என்பதை ஆப்கான் மக்கள் தெளிவாக நினைவுகூர்கின்றனர். முக்கியமாக பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள், நீர்வள மேம்பாட்டுக்கான இந்திய - ஆப்கானிஸ்தான் நட்புறவு அணை என்று நம்முடைய பங்களிப்பின் பட்டியல் சற்று நீளமானது. ஆக, யார் ஆப்கானுக்குள் சென்றாலும் இந்தியாவின் முத்திரையானது ஆப்கானின் வளர்ச்சியில் இருப்பதைக் காண முடியும். ஆகவே, ஆப்கானில் இந்தியர்கள் பாதுகாப்பாக வாழ்வது, அவர்களைப் பாதுகாப்பாக வெளியே கொண்டுவருவது, அங்கு நாம் செய்துகொண்டிருக்கும் வளர்ச்சிப் பணிகளைப் பாதுகாத்து, அதன் மூலம் ஆப்கன் சமூகத்தின் வளர்ச்சியைத் தொடர்வது ஆகிய நோக்கில் ஆப்கானுடனான இந்தியாவின் பேச்சு பலப்பட வேண்டும்.

இதன் மூலம் தலிபான்கள் எவ்வகையான உத்தரவாதத்தைத் தரப்போகிறார்கள் என்று தெரியவில்லை. இந்தியாவைச் சுற்றிவளைக்க சீனா மேற்கொள்ளும் நெடுங்கால முயற்சியான 'முத்து மாலை'க்கு (String of Pearls) ஆப்கானிஸ்தானைத் துணைக்கு அழைக்க சீனாவின் முதலீடு தயாராக இருக்கிறது என்பதை நமது வெளியுறவுத் துறை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தியாவின் தயக்கம் நமக்குப் புரிகிறது. சர்வதேச அரசியலில் அமைதியை ஏற்படுத்தவும் பிராந்திய ஸ்திரத்தன்மையையும் இந்தியாவின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, பல கோணங்களில் தலிபான்களுடன் பேச்சு முன்னெடுப்பது தான் நல்லது.

ஆப்கானிஸ்தானின் அரசியல் நிலை சீராகும் வரை காத்திருக்கும் அணுகுமுறையை இந்தியா பின்பற்றுமேயானால், அங்குள்ள அரசியல் களத்தில் பாகிஸ்தானும் சீனாவும் நன்றாகக் காலூன்றிவிடும். பின்பு, நமக்கு அங்கு வேலை இல்லை என்ற நிலை பெரும் ஆபத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடியது. இன்னொரு பாகிஸ்தானாக ஆப்கானிஸ்தான் மாற்றப்படுமேயானால், ஆபத்து இந்தியாவுக்குத்தான் அதிகம். ஜனநாயக நாடுகள் தங்களுக்கிடையில் போர் செய்யத் தயங்கும் என்பது ஜனநாயக சமாதானக் கோட்பாடு. ஆனால், இந்தியாவைச் சுற்றியுள்ள பாகிஸ்தான், சீனா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் ஜனநாயகம் என்ற சொல்லை உச்சரிப்பது கூடக் குற்றமாகக் கருதப்படும் நிலையில், நம் பாதுகாப்புக்கு முன் நிற்கும் சவால்களை உன்னிப்பாகக் கவனித்து, வருமுன் காத்துக்கொள்வதே புத்திசாலித்தனம். ●



ஈழநாடு

# 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் வினாத்தாள் ஆசிரியர் : கே.பாலகஜன்
கணக்கீடு - I நேரம் : 2 மணித்தியாலங்கள்

கல்வி tv CHANNEL

**அறிவுறுத்தல்கள்:**

- 1 **தொடக்கம் 30** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
- **31 தொடக்கம் 50** வரையுள்ள வினாக்களுக்குச் **சுருக்கமான விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
- ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு புள்ளிகள் உரித்தாகும்.**
- உங்கள்**சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள **உரிய கூட்டினுள் தெளிவாக** எழுதுக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | | | | |
|---|---|---|---|---|
| வினாத்தாள் I இற்கான | | பரீட்சகர் | கையொப்பம் | குறியீட்டு எண் |
| வினா இல. | புள்ளிகள் | 1வது பரீட்சகர் | | |
| | | 2வது பரீட்சகர் | | |
| 01 - 30 | | மேலதிக/பிரதம பரீட்சகர் | | |
| 31 - 50 | | எண்கணிதப் பரிசோதகர் | | |
| மொத்தம் | | பிரதம பரீட்சகர் | | |

**1)** நிறுவனமொன்றினால் தயாரிக்கப்படும் **"குறித்த நோக்கத்திற்கான நிதிக்கூற்றுக்கள்"** தொடர்பில் பின்வருவனவற்றுள் **எக்கூற்று/கூற்றுக்கள் சரியானது/சரியானவை?**

A - அவை உள்ளகப் பாவனையாளர்களின் பயன்பாட்டுக்காகத் தயாரிக்கப்படுகின்றது.

B - அவை நிறுவனமொன்றின் முகாமைத்துவத் தகவல் முறையின் பகுதி ஒன்றாகக் காணப்படுகின்றது.

C - அவை நிறுவனமொன்றின் கடந்தகால, எதிர்காலத் தகவல்களைப் பிரதானமாக வழங்குகின்றது.

1. A மாத்திரம்  2. A, B ஆகியன மாத்திரம்  3. A,C ஆகியன மாத்திரம்
4. B, C ஆகியன மாத்திரம்  5. A, B, C ஆகியன எல்லாம்

(.............)

**2) வரையறுக்கப்பட்ட அபிதா PLC** ஆனது **2021.03.31** இல் உள்ள **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களினை** இத்தினத்தில் **மீள் மதிப்பீடு** செய்து அறிக்கையிடப்பட்டது. இம் மீள்மதிப்பீடு தொடர்பில் காணப்படும் **அடிப்படை தராதியான** பண்பும், அப்பண்புக்கு காணப்பட வேண்டிய **துணைப்பண்புகளும் சரியானது**

| | அடிப்படைப்பண்பு | துணைப்பண்புகள் |
|---|---|---|
| 1. | பொருத்தமான தன்மை | எதிர்வுகூறக்கூடிய தன்மை, சான்று படுத்தக்கூடிய தன்மை, அளவிடக்கூடிய தன்மை |
| 2. | உண்மையான பிரதிநிதித்துவம் | பூரணத்தன்மை, நடுநிலைத்தன்மை |
| 3. | உறுதிப்படுத்தக்கூடிய தன்மை | விளங்கக்கூடியது, நடுநிலைத்தன்மை |
| 4. | பொருத்தமான தன்மை | பூரணத்தன்மை, நடுநிலைத்தன்மை |
| 5. | உண்மையான பிரதிநிதித்துவம் | விளங்கக்கூடியது, பூரணத்துவம் |

(.............)

- **3,4,5 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.** பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள், நிகழ்வுகள் **சர்மி வியாபாரத்தில் இடம்பெற்றுள்ளன.**
  - **01.07.2021** தினாவிடமிருந்து கடனுக்கு ரூபா.300000 **கிரயமான** சரக்குகள் **கொள்வனவு**
  - **05.07.2021** தினாவிற்கு ரூபா.60000 **கிரயமான** சரக்குகள் **திருப்பி அனுப்புதல்**
  - **20.07.2021** ரூபா.200000 கிரயமுடைய பொருட்கள் ரூபா.320000 இற்கு ரூபா.20000 விற்பனைத்தரகுடன் கோசிற்கு **கடனுக்கு விற்பனை**
  - **25.07.2021** தினாவிற்கு செலுத்த வேண்டிய பெறுமதியில் ரூபா.100000 **காசாகச் செலுத்தப்பட்டதுடன்** மிகுதி வியாபார வருமதியின் மீதிக்கு எதிராக **எதிர்த்தீர்த்தல் செய்யப்பட்டது**
  - **03.08.2021** கோசியிடமிருந்து பெறவேண்டிய பெறுமதியின் **50%** இல், **10%** கழிவு **கழித்து காசு பெறப்பட்டது.**

**3) 31.07.2021** இல் உள்ளவாறான **சர்மி வியாபாரத்தில்** மேற்படிக் கொடுக்கல்வாங்கல்களின் **தேறிய தாக்கத்தினைக் காட்டும் கணக்கீட்டுச்சமன்பாடு:**

| | சொத்துக்கள் | = | பொறுப்புக்கள் | + | நிறுத்தி வைத்த வருமானம் |
|---|---|---|---|---|---|
| 1. | 320000 | = | 240000 | + | 80000 |
| 2. | +300000 | = | 200000 | + | 100000 |
| 3. | +100000 | = | 0 | + | 100000 |
| 4. | 84000 | = | 80000 | + | 4000 |
| 5. | 84000 | = | 0 | + | 84000 |

(.............)

**4) தினா வியாபாரிகளுடன்** மேற்கொண்ட கொடுக்கல்வாங்கல்களை அவை **நிகழ்ந்த ஒழுங்கு வரிசையின்** அடிப்படையில் **சர்மி வியாபாரத்தின்** புத்தகங்களில் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட **மூல ஏடுகள்**

1. பொதுநாளேடு, கொள்வனவுத்திரும்பல் நாளேடு, காசுப்பெறுவனவு நாளேடு, பொதுநாளேடு
2. கொள்வனவு நாளேடு, கொள்வனவுத்திரும்பல் நாளேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு, பொதுநாளேடு
3. விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு, காசுப்பெறுவனவு நாளேடு, கொள்வனவு நாளேடு
4. கொள்வனவு நாளேடு, உட்திரும்பல் நாளேடு, காசுப்பெறுவனவு நாளேடு, பொது நாளேடு
5. கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு, காசுப்பெறுவனவு நாளேடு

(.............)

**5) சர்மி வியாபாரத்தின் 2021 யூலை** மாதத்திற்கான **வருமானமும், செலவீனமும் 31.07.2021** இல் உள்ளவாறான **வியாபார வருமதியாளர்** மீதியும் முறையே.

| | வருமானம்(ரூபா) | செலவீனம்(ரூபா) | வியாபார வருமதிகள்(ரூபா) |
|---|---|---|---|
| 1. | 320000 | 220000 | 320000 |
| 2. | 320000 | 420000 | 160000 |
| 3. | 220000 | 140000 | 320000 |
| 4. | 80000 | 220000 | 100000 |
| 5. | 240000 | 220000 | 0 |

(.............)

# அதிபர், ஆசிரியர்களுக்கான ரூ. 5,000 இடைக்கால கொடுப்பனவு இம்மாதம்

## அமைச்சரவை இணை பேச்சாளர் உறுதி

கொழும்பு, செப். 09

அதிபர்கள், ஆசிரியர்களுக்கான 5 ஆயிரம் ரூபாய் இடைக்காலக் கொடுப்பனவு இந்த மாதச் சம்பளத்துடன் கிடைக்கப் பெறும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.



கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- "கொரோனாத் தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார தாக்கத்தால் அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை முழுமையாகத் தீர்ப்பதில் சிக்கல் உள்ளது.

இதனால் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அவர்களது சம்பள முரண்பாட்டைக் கட்டம் கட்டமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (இ)

# தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

## அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

கொழும்பு, செப். 09

**"எமது கோரிக்கைகளுக்கான உரிய தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி அல்லது நிதி அமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடும்வரையில் எமது போராட்டம் தொடர்ந்தும் நடத்தப்படும்."**

- இவ்வாறு அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள் கூட்டாகத் தெரிவித்தன.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள் இணையவழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து விலகி முன்னெடுத்துள்ள தொழிற்சங்கப் போராட்டம் நேற்று 59 நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும்தமது தொழிற்சங்கப் போராட்டத்தால் மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள அசௌகரியத்துக்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள் இணைந்து ஜனாதிபதியுடனும், நிதி அமைச்சருடனும் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு தொடர்ந்தும் கோரி வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.




எனினும், இதுவரையில் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. பல அமைச்சரவைக் கூட்டங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் அவற்றில் முறையான தீர்வு எட்டப்படவில்லை. இதனால் மாணவர்களே பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் மேலும் கூறினார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 674 பேர் கைது

கொழும்பு, செப். 09

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறியமை தொடர்பாக நேற்றுமுன்தினம் மாத்திரம் 674 பேர் கைதுசெய்யப்பட்டதுடன் 42 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

299 பொலிஸ் அதிகாரிகளைக் கொண்டு மேல் மாகாண எல்லையில் 13 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் பொதுமுடக்கத்தை மீறிப் பயணித்த 1,357 பேருடன் 883 வாகனங்கள் திருப்பியனுப்பப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் விதிகளை மீறியவர்கள் தொடர்பாக நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் இதுவரை 67 ஆயிரத்து 342 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்



அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, கடந்த மாதம் 20ஆம் திகதி பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 11 ஆயிரத்து 137 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேவேளை, 1,321 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ)

# வயோதிப பெண் எரித்து கொலை!

கொழும்பு, செப். 09

நீர்கொழும்பு - தளுபன பகுதியில் பெண் ஒருவர் எரித்துக் கொலைசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தீக்காயங்களுடன் வீடொன்றில் பெண் ஒருவரின் சடலம் காணப்படுகின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் 89 வயதுடைய குறித்த பெண்ணை மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்துள்ளமை தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்த நீர்கொழும்பு பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கொரோனா தொற்றால் 40 கர்ப்பவதிகள் மரணம்

கொழும்பு, செப். 09

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 40 கர்ப்பவதிகள் மரணமடைந்தனர் என்று குடும்ப சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 5 ஆயிரத்து 500 கர்ப்பவதிகள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

வெவ்வேறு நோய்நிலைமைகளால் பாதிக்கப்பட்ட கர்ப்பவதிகளே கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கர்ப்பவதிகள் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு தடுப்பூசி செலுத்திக்கொள்வதே சிறந்த வழி என்றும் குடும்ப சுகாதாரப் பிரிவு மேலும் கூறியுள்ளது. (இ)

# மண்வெட்டியால் தாக்கி குடும்பஸ்தர் கொலை!

கொழும்பு, செப். 09

குருநாகல் மாவட்டம், கொட்டவெஹர பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொட்டவெஹர - திகென்னேவ பகுதியில் இரு குழுக்களுக்கு இடையிலான காணிப் பிரச்னை காரணமான 44 வயதுடைய குடும்பஸ்தர் மண்வெட்டியால் தாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கொலைச் சம்பவம் தொடர்பில் ஒரு தம்பதியினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# முள்ளிப்பொத்தானையில் இளைஞரின் சடலம் மீட்பு!

திருகோணமலை, செப். 09

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானையில் இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இந்தச் சடலம் மீட்கப்பட்டது எனத் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முள்ளிப்பொத்தானை, சதாம் நகரைச் சேர்ந்த 22 வயதுடைய அலிபுல்லா அர்ஷான் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)




# பிரகாஸுக்கு அஞ்சலி!

வவுனியா, செப். 09

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த யாழ். சுயாதீன ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸுக்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வில், அவரின் திருவுருவப் படத்துக்குத் தீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அவர் தொடர்பான நினைவுரையை வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார் நிகழ்த்தினார். (இ)

ஈழநாடு



# ஆப்கானின் தலைவராக முஹமது ஹசன் அறிவிப்பு

## அப்துல் பரதருக்கு உபதலைவர் பதவி

காபூல், செப். 09

ஆப்கானிஸ்தானை ஆளப் போகும் தலைவர்களின் பட்டியலை தலிபான்கள் அறிவித்துள்ளனர். இதன்படி தலிபான் இயக்கத்தின் தலைவர் முகமது ஹசன் அகுந்த் இடைக்கால அரசின் தலைவராகவும் அப்துல் கனி பரதர் உப தலைவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

உள்விவகார அமைச்சராக சிராஜூதீன் ஹக்கானி அறிவிக்கப்பட்டுள்ளார் என்று தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாகிதீன் பத்திரிகையாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறிய நிலையில், தலிபான்கள் விரைவாக அந்த நாட்டை தமது பிடிக்குள் கொண்டு வந்தனர். இதையடுத்து



அரசாங்கத்தைக் கட்டமைப்பதற்காகவே ஒரு சிறப்புக் குழு உருவாக்கப்பட்டது. இந்தக் குழு தனது பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

இதன்படி, தலிபான் இயக்கத்தின் தலைவர் முகமது ஹசன் அகுந்த் தலைவராக இருப்பார் என்றும் அப்துல் கனி பரதார் துணைத் தலைவராக இருப்பார் என்று தலிபான்கள் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

இதேசமயம், பாதுகாப்பு அமைச்சராக முல்லா ஓமரின் மகன் முல்லா முகமது யாகூப், நிதியமைச் சராக ஹெதாயத்துல்லா பத்ரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)



# செவ்வாயில் மாதிரியை சேகரித்தது “பெர்சவரன்ஸ்”

## உயிர்கள் இருந்ததை உறுதிப்படுத்த வாய்ப்பு

புளோரிடா, செப். 09

செவ்வாய் கிரகத்தில் பாறை மாதிரியை பெர்சவரன்ஸ் ரோவர் சேகரித்ததாக நாஸா அறிவித்துள்ளது. கடந்த திங்கட்கிழமை ரோவர் விண்கலத்தில் பொருத்தப்பட்ட கை பாறையை குடைந்து மாதிரிகளை சேகரித்தது. ஆரம்பத்தில் இது தொடர்பான தெளிவற்ற படங்கள் நாஸாவுக்கு கிடைத்தாலும், பாறை மாதிரிகள் சேகரிக்கப்பட்டமையை அந்த அமைப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

பூமியின் ஒத்த வடிவத்தைக் கொண்டுள்ள செவ்வாய் கிரகத்தில், 3500 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உயிர்கள் வாழ்ந்தன என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ஆனால், தற்போது அதன் வளிமண்டலம் மெல்லியதாகவும், கரியமில வாயுக்களாலும் சூழலப்பட்டுள்ளது.

இந்த நிலையில், செவ்வாய் கிரகத்துக்கு நாஸா அனுப்பியுள்ள ரோவர் விண்கலம் தனது 7 அடி நீள கையால் பாறையை குடைந்து மாதிரிகளை சேகரித்துள்ளது. இந்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டமை செவ்வாய் குறித்த ஆய்வில் முக்கிய மைல்கல்லாகும்.

சந்திரனிலிருந்து அப்பலோ விண்கலம் மூலம் ஆய்வுக்காக மாதிரிகள் கொண்டுவரப்பட்டது போன்று செவ்வாயிலிருந்து பெர்சவரன்ஸ் மாதிரிகளை பூமிக்கு விரைவில் கொண்டுவரும். இந்த மாதிரிகளை ஆய்வுக்கு உட்படுத்தும்போது செவ்வாய்க் கிரகத்தில் உயிர்கள் இருந்தனவா என்ற கேள்வி உட்பட அற்புதமான பல விடயங்களை நாம் எதிர்பார்க்கிறோம் என்று நாஸாவின் துணை நிர்வாகி தோமஸ் சுர்புசென் கூறினார்.

பெர்சவரன்ஸ் விண்கலம் 2021 பெப்ரவரி மாதம் தரையிறங்கியது. ஓகஸ்ட் முதல்வாரத்தில் மாதிரிகளை சேகரிக்கும் பணி தோல்வியில் முடிவடைந்தது என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)



# மெக்சிக்கோ மருத்துவமனைக்குள் புகுந்த வெள்ளத்தால் 16 பேர் பலி!

மெக்சிக்கோசிற்றி, செப். 09

மெக்சிக்கோவில் மருத்துவமனைக்குள் புகுந்த வெள்ளத்தால் ஏற்பட்ட மின் தடை மற்றும் ஆக்சிஜன் தடையால் நோயாளிகள் 16 பேர் உயிரிழந்தனர்.

வடஅமெரிக்க நாடான மெக்சிக்கோவின் தலைநகரில் இருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் டவுண்டவுன் டூலா நகரில் நேற்றுமுன்தினம் அதிகாலை திடீரென கனமழை பெய்தது. இதனால் அங்குள்ள ஆறு பெருக்கெடுத்தது.

இந்த நிலையில், நகரிலுள்ள பொது மருத்துவமனைக்குள வெள்ளம் திடீரெனப் புகுந்தது. அச்சமயம் அங்கு விடுதியில் 53 பேர் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்தனர். இதில் 16 பேருக்கு ஒட்சிசன் இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. வெள்ளத்தால், மின்சாரம் தடைப்பட்டமையால் ஒட்சிசன் இணைப்பு தடைப்பட்டு அவர்கள் அனைவரும் உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் மருத்துவமனைக்குள் சிக்கிய எஞ்சிய நோயாளிகளை மீட்டு அருகிலுள்ள வேறொரு மருத்துவமனைக்கு மாற்றினர். (ஐ)

# பலஸ்தீனம் மீது இஸ்ரேல் தாக்குதல்!

ஜெருசலேம், செப். 09

பலஸ்தீனம் மீது திங்கட்கிழமை இரவு இஸ்ரேல் வான்வழி தாக்குதல்களை நடத்தியது.

ஹமாஸ் போராளிகளின் இராணுவ வளாகம் ஏவுகணை உள்ளிட்ட ஆயுத உற்பத்திகூடம்மீது போர் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

மேலும், அன்றைய தினம் மாலை காஸா நகரப் பகுதியிலிருந்து வெடிபொருட்கள், தீயை சுமந்தபடி பலூன்கள் தெற்கு இஸ்ரேல் நோக்கி ஏவப்பட்டன. இதில் பல இடங்கள் தீப்பற்றி எரிந்தன. இதற்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக வும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் பலஸ்தீன தரப்பிடமிருந்து எந்த அறிவித்தலும் விடுக்கப்படவில்லை.

இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே காஸா தொடர்பில் நீண்டகாலமாக மோதல் நீடித்து வருகின்றது. கடந்த மே மாதம் இரு தரப்பினரிடையேயும் ஏற்பட்ட மோதல் 11 நாட்கள் நீடித்தன. இதில் 250இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இரு தரப்பிலும் உயிரிழந்தனர். 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சீனாவில் கடும் வறட்சி 10 இலட்சம் பேர் பாதிப்பு!

பீஜிங், செப். 09

ஜூலை முதல் தொடர்ந்து வெப்பமான வானிலை நிலவுவதால் வடமேற்கு சீனாவின் கன்சூ மாகாணத்தில் உள்ள பல மாவட்டங்கள் வறட்சியை எதிர்க் கொண்டுள்ளன.

இதுகுறித்து சினுவா வெளியிட்ட செய்தியில், “ சீனாவின் கன்சூ மாகாணத்தின் பல மாவட்டங்களில் நிலவும் அதீத வெப்ப நிலையால் கடுமையான வறட்சி நிலவுகிறது. இதனால் சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 60 ஆயிரம் ஹெக்ரெயர் அளவிலான பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்திலும் கன்சூ மாகாணத்தில் மழை பெய்யும் வாய்ப்பு குறைவு. இதனால், சில நாட்களுக்கு வறட்சி மேலும் தொடரலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)





# இந்தோனேசிய சிறையில் தீ; 41 பேர் மரணம்; 39 பேர் காயம்!

ஜகார்த்தா, செப். 09

இந்தோனேசியா தலைநகர் ஜகார்த்தாவின் புறநகரில் உள்ள தங்கெராங் சிறைச்சாலையில் நேற்று புதன் கிழமை அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி குறைந்தது 41 கைதிகள் உயிரிழந்தனர். மேலும் 39 பேர் காயமடைந்தனர்.

சிறைக்கூடத்தின் சி - பிரிவில் பெரும்பாலான கைதிகள் நித்திரையிலிருந்தபோது இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. இந்தப் பிரிவில் 122 கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். இந்தப் பிரிவில் 82 கைதிகளை அடைக்கும் கொள்ளளவு கொண்டபோதும், 40 பேர் மேலதிகமாக அடைக்கப்பட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

இறந்த மற்றும் காயமடைந்த கைதிகளில் பெரும்பாலானோர் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறை வைக்கப்பட்டவர்களாவர். காயமடைந்தவர்களில் பலர் ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தத் தீ விபத்துக்கான காரணம் என்ன? என்பது குறித்து அதுவரை அறிவிக்கப்படவில்லை. மின் கசிவே இந்த விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தீ பரவியபோது மொத்த சிறைச்சாலை வளாகத்திலும் 15 சிறை காவலர்கள் மட்டுமே கடமையில் இருந்தனர். மொத்ததமாக சிறையில் 2,000 கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது. எனினும், இந்த சிறையில் 600 கைதிகளையே பராமரிக்க முடியும் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# பூமியை கண்காணிக்க புதிய செயற்கைகோள்!

பூமியை கண்காணிப்பதற்கு புதிய செயற்கை கோள் ஒன்றை நேற்று முன்தினம் சீனா வெற்றிகரமாக ஏவியது.

‘காபென்5-02’ என்ற இந்த செயற்கைக்கோள் புவி வட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டதாக சீனா அறிவித்துள்ளது. இந்த செயற்கைகோள் சுற்றுச்சூழல் கண்காணிப்புக்காக பயன்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# பரா ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றோருக்கு கார் பரிசு

கொழும்பு, செப். 09

ரோக்கியோ பரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற தினேஷ் பிரியந்த மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற துலான் கொடிதுவக்கு ஆகிய இருவருக்கும் இரண்டு கார்களை பரிசளித்துள்ளது ஜப்பானிலுள்ள ஸ்ரீ லங்கா ஓட்டோமொபைல் அசோசியேஷன்.

இலங்கை பரா ஒலிம்பிக் குழுவினர் இலங்கை நோக்கி புறப்படுவதற்கு முன்பாக ரோக்கியோ விமான நிலையத்தில் வைத்து ஜப்பானிலுள்ள ஸ்ரீலங்கா ஓட்டோமொபைல் அசோசியேஷன் அதிகாரிகள் சந்தித்தனர்.

இதன்போது, உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்ற தினேஷ் பிரியந்த மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற துலான் கொடிதுவக்கு ஆகிய இருவருக்கும் ஜப்பானிலுள்ள ஸ்ரீலங்கா ஓட்டோமொபைல் அசோசியேஷன் இரண்டு கார்களை வழங்கியது. அதற்கான மாதிரி படிவத்தை தினேஷ் மற்றும் துலான் ஆகிய இருவருக்கும் அந்நிறுவனத்தின் அதிகாரிகள் வழங்கியிருந்தனர். (ஐ)



# டெஸ்ட் தரவரிசை பும்ரா முன்னேற்றம்!

டுபாய், செப். 09

இங்கிலாந்து அணிக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு காரணமான இரு விக்கெட்களை கைப்பற்றிய பும்ரா வீரர்கள் தரவரிசையில் 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று டெஸ்ட் வீரர்களுக்கான தரவரிசையை வெளியிட்டது.

இந்தப் பட்டியலில், நான்காவது போட்டியில் முக்கிய பங்கு வகித்த இந்திய வீரர் தாகூர், இங்கிலாந்து வீரர் ஒலே போப் ஆகியோரும் கணிசமான இடங்கள் முன்னேறினர்.

ஷர்துல் தாகூர் இரு இனிங்ஸிலும் அரைச்சதங்கள் அடித்து வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தார். இதனால் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் தாகூர், 59 இடங்கள் நகர்ந்து 79-வது இடத்துக்கு முன்னேறியுள்ளார். பந்துவீச்சாளர் வரிசையிலும் தாகூர் 7 இடங்கள் நகர்ந்து, 49ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்திய தொடக்க ஆட்டக்காரர் ரோஹித் சர்மா ஓவல் டெஸ்டில் சதம் அடித்தபோதிலும் தரவரிசையில் எந்த மாற்றமும் இல்லாமல் 5ஆவது இடத்திலேயே நீடிக்கிறார்.

பும்ரா 10ஆவது இடத்திலிருந்து 9ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இதேவேளை துடுப்பாட்ட வரிசையில் இங்கிலாந்து வீரர் ஒலே போப் 9 இடங்கள் முன்னேறி 49ஆவது இடத்தைப் பிடித்தார்.

இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் கிறிஸ் வோக்ஸ் 7 இடங்கள் முன்னேறி 87ஆவது இடத்துக்கு நகர்ந்துள்ளார். ரொபின்சன் 3 இடம் நகர்ந்து 33ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். (ஐ)

## 18 மாதங்களின் பின்னர்

# தொடரை வென்றது இலங்கை அணி!



18 மாதங்களின் பின்னர் முதன் முறையாக தொடர் ஒன்றை இலங்கை அணி கைப்பற்றியுள்ளது. தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் தொடரையே 2 -1 என்ற கணக்கில் இலங்கை அணி வென்றுள்ளது.

இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்க அணி 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. முதல் இரு போட்டிகளிலும் தலா ஒரு வெற்றி என்ற கணக்கில் சமநிலையில் இருந்த இரு அணிகளும், தீர்க்கமான மூன்றாவது போட்டியில் நேற்று முன்தினம் மோதின.

கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப வீரர்களான அவிஸ்க பெர்னாண்டோ 10, தினேஷ் சந்திமால் 9 என்று ஆட்டமிழந்தபோதும், நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த தனஞ்சய டீ சில்வா, சரித் அசலங்க ஆகியோர் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

எனினும், தனஞ்சய 31 ஓட்டங்களுடன் விக்கெட்டை இழந்தார். அசலங்க 3 ஓட்டங்களால் அரைச் சதத்தைத் தவறவிட்டு 47 ஓட்டங்களுடன சம்சியின் பந்தில் விக்கெட் காப்பாளரிடம் கிளசென்னிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களே தாக்குப்பிடித்தனர். இறுதியில் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 203 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் கேசவ் மஹராஜ் 3, ஜோர்ஜ் லிண்ட், சம்சி ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இலகு இலக்கான 204 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தென்னாபிரிக்கா அணி களமிறங்கியது.

ஆரம்பமே தென்னாபிக்காவுக்கு சிறப்பாக அமையவில்லை. தொடக்கம் கொடுத்தவர்களில் ஒருவரான மார்க்ரம் 2, அடுத்து வந்த ஹென்றிக்ஸ் 1, வான் டேர் டுசென் 5 என சொற்ப ஓட்டங்களுடன் விழ 19 ஓட்டங்களுக்கு முக்கிய வீரர்களின் 3 விக்கெட்களை இழந்து அணி தடுமாறியது.

அறிமுக வீரரான தீக்ஷனவின் அபாரமான பந்துவீச்சால் பின் வரிசை வீரர்களும் வந்த வேகததிலேயே பெவிலியனுக்கு நடையை கட்டினர். அந்த அணியின் சார்பில் ஹென்றிக் கிளசென் பெற்ற 22 ஓட்டங்களை அதிகூடிய ஓட்டமாக இருந்தது.

இந்த நிலையில், 30 ஓவர்களில் 125 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது தென்னாபிரிக்கா. இதனால் இலங்கை அணி 78 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அறிமுகப் போட்டியிலேயே தீக்ஷன 4 விக்கெட்களை கைப்பற்றி அசத்தினார். சாமீர, ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றியிருந்தனர். போட்டியின் நாயகனாக துஷ்மந்த சாமீர, தொடர் நாயகனாக சரித் அசலங்க தெரிவாகினர்.

# ஜோகோவிச் காலிறுதியில்

நியூயோர்க், செப். 09

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் சேர்பிய வீரர் ஜோகோவிச் 12ஆவது முறையாக காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க்கில் நடக்கிறது. இதில் ஆடவர் பிரிவில் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முதல்நிலை 20 கிராண்ட்ஸ்லம் பட்டம் வென்றவருமான நோவக் ஜொகோவிச், 99ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் 20 வயதான ஜென்சன் புரூக்பியை சந்தித்தார்.

முதல் செற்றைஜென்சன் புரூக்பி 29 நிமிடத்தில் தனதாக்கி அசத்தினார். ஆனால், அதன் பிறகு அவர் ஜோகோவிச்சின் ஆக்ரோஷமான ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறினார். 2 மணி 58 நிமிடம் நடந்த இந்த மோதலில் ஜோகோவிச் 1-6, 6-3, 6-2, 6-2 என்ற செற் கணக்கில் ஜென்சன் புரூக்பியை வீழ்த்தி 12ஆவது முறையாக காலிறுதிக்கு முன்னேறினார். (ஐ)





## அமெரிக்க ஓப்பன்:

# லேலா, சபலென்கா அரையிறுதியில்!

நியூயோர்க், செப். 09

கனடாவின் இளம் வீராங்கனையான லேலா பெர்னாண்டஸ், முன்னணி வீராங்கனையான அரினா சபலென்கா ஆகியோர் அமெரிக்க ஓப்பனின் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க்கில் நடக்கிறது. இதில் பெண்கள் பிரிவில் நேற்று நடந்த இரு காலிறுதி போட்டிகள் நடந்தன.

இதில் ஒன்றில், கனடாவின் இளம் வீராங்கனையான லேலா பெர்னாண்டஸ் உக்ரைனின் எலைனா ஸ்விட்ரோலினாவை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் 6 - 3, 3 - 6, 7 - 6 (7 - 5) என்ற கணக்கில் லேலா வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதேவேளை, மற்றொரு காலிறுதி போட்டியில் செக் குடியரசின் பார்போராவை பெலாரஸின் அரினா சபலெங்கா எதிர்கொண்டார்.

இதில், 6 - 1, 6 - 4 செற் கணக்கில் வென்ற சபலெங்கா அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

# வவுனியாவில் தேங்கி கிடக்கும் கொரோனா தொற்று சடலங்கள்

வவுனியா, செப். 09

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 20 இற்கும் மேற்பட்ட கொரோனா சடலங்கள் தேங்கியுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று பரவல் அதிகரித்துள்ளதுடன், இறப்புக்களும் அதிகரித்து வருகின்றன. தொற்று காரணமாக மரணமடைபவர்களின் உடல்கள் சுகாதார நடைமுறைகளுடன் வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள மின் மயானத்திலேயே தகனம் செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த மின் மயானத்தில் நாள் ஒன்றுக்கு 6 சடலங்களையே தகனம் செய்யக் கூடியதாகவுள்ளது. ஆனால், தற்போது வவுனியாவில் இறப்புக்கள் அதிகரித்து வருவதால் சடலங்களை உடனடியாகத் தகனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த தினங்களில் மரணமடைந்த 20 இற்கும் மேற்பட்ட சடலங்கள் தற்போது தகனம் செய்யப்படாத நிலையில் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த சடலங்களை முழுமையாகத் தகனம் செய்ய மூன்று தினங்கள் தேவையாகவுள்ள நிலையில் தொடர்ந்தும் இறப்புக்கள் ஏற்பட்டால் தகனம் செய்வதில் மேலும் நெருக்கடி நிலை ஏற்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மாவட்டத்தின் தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டு ஒவ்வொருவரும் சமூகப் பொறுப்புடன் தொற்றில் இருந்து விடுபட சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதுடன், அரசினதும், சுகாதாரப் பிரிவினரதும் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (இ)

# நாமல் இன்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், செப். 07

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான கண்காணிப்பு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று அவரின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாமல் ராஜபக்ஷ அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சராக மேலதிக பொறுப்பேற்றுள்ள நிலையில், அரசின் அனுசரணையில் யாழில் முன்னெடுக் கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் கண் காணித்து அவற்றைத் துரிதப் படுத்தும் நோக்கிலேயே அவ ரது யாழ். விஜயம் அமைய வுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில், அமைச்சரின் வருகையை முன்னிட்டு எவ்வித விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படவில்லை.

கொரோனாத் தொற்று நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாடளாவிய ரீதியிலான அபிவிருத்திச் செயல்பாடுகளை அரசு தடையின்றி முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (இ - 03)

# தமிழ் தேசிய கூட்டமைப்பு உடைவதை விரும்பமாட்டேன்

## சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், செப்.09

**“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்டது. ஆகவே, அது உடைந்து போவதை நான் தனிப்பட்ட முறையில் விரும்பமாட்டேன்.”**

- இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நான் தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்தவன். இன்று இருப்பது போல் ‘சேம் சைட்’ கோலடிக்கும் தேவை எனக்குக் கிடையாது.

எது நியாயமோ எது சரியோ அதை யார் செய்தாலும் நான் சரி என்பேன். அதே பிழை என்றால் பிழை என்று கூறுவது என்னுடைய பொறுப்பு. இனி நான் பயப்படமாட்டேன். இதுவரை நான் அடக்கி வாசித்தேன். என் தலையில் மிளகாய் அரைக்கலாம் என்று சிலர் நினைக்கின்றார்கள்.

ஒரு சிலரை தாக்குவதாக நினைத்துக்கொண்டு தமிழரசுக் கட்சியைத் தாக்குகின்றனர். தமிழரசுக் கட்சியை ஓரங்கட்ட நினைப்பது பகல் கனவு. எந்தக் கொம்பனாலும் அதனை அழிக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பங்காளிக் கட்சிகள் போகப் போகின்றோம் என முடிவெடுத்தால் அதை நாங்கள் தடுக்க முடியாது. ஆனால், அவர்கள் அவ்வாறான ஒரு முடிவை எடுக்கமாட்டார்கள் என்றே நான் கருதுகின்றேன்” - என்றார்.

தமிழரசுக் கட்சி ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு கடிதம் எழுதியது தொடர்பாக அவரிடம் கேள்வி எழுப்பியபோது,

“என்னைப் பொறுத்தவரையில் ஊடகச் செய்திகளைப் பார்க்கும்போது சில செய்திகளில் உண்மை இல்லை என்றே தெரிகின்றது.

விடுதலைப்புலிகள் மீதும் விசாரணையை வலியுறுத்தும் ஒரு கடிதத்தை எனக்குத் தெரிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தமிழரசுக் கட்சி சார்ந்து அனுப்பியதாக இல்லை. அதை மட்டும் என்னால் உறுதியாகக் கூற முடியும். அவ்வாறு எழுதினால் நான் அதனை வெளிப்படுத்துவேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஆகவே, அது உடைந்து போவதை நான் தனிப்பட்ட முறையில் விரும்பமாட்டேன்” - என்று பதிலளித்தார். (இ - 03)


# ஜனாசா அறிவித்தல்



## I.லாபிர் நிராஸ்

(சமூகசேவையாளர்- யாழ்ப்பாணம்)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 08 - 08 -1979 | 08 - 09 - 2021 |

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட I.லாபிர் நிராஸ் (08.09.2021) இன்று அதிகாலை 5.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் காலமானார்.

இவர் REXIN SPOT கடை உரிமையாளரும், ஓய்வுபெற்ற ஆசிரியருமான இஸ்லத்தில் லாபிர் S.இல்மாஸ் அவர்களின் மூத்தபுதல்வரும், நிம்ரோஸ், நைரூஸ் அவர்களின் சகோதரரும், சியானாவின் அன்புக் கணவரும், நபீஹா, நஜீஹாநாசிப் ஆகியோரின் அன்புதந்தையும், அக்மல் (UK), நுஸ்கா அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
L.M.நிம்ரோஸ் - 0770303907

தகவல்:
சகோதரன்.






# ‘வன்னி ஹோப்’ நிறுவனத்தால் ‘ஸ்மார்ட் போன்’ வழங்கிவைப்பு

வடமராட்சி, செப். 09

அவுஸ்திரேலியாவில் இயங்கி வரும் தொண்டு நிறுவனமான வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் டிஜிற்றல் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் வறிய மாணவர்களுக்கு மூன்றாம் கட்டமாக ‘ஸ்மார்ட் போன்’ வழங்கும் நிகழ்வு யாழ்., வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்விப் பணிமனையில் வைத்து உதவிக் கல்விப் பணிப்பாளரும் வன்னி ஹோப் நிறுவனத்தின் கல்வி மேம்பாட்டு மூத்த ஆலோசகருமான பீ. என். சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

நவீன கற்றல் வசதிகளை கிராமப்புற மாணவர்களுக்கு வழங்கும் நோக்குடன் வன்னி ஹோப் நிறுவனம் பல கல்வி சார் செயல்திட்டங்களை வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் மேற்கொண்டு வருகின்றது. வன்னி ஹோப் நிறுவனத்தின் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்டமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் ஆழியவளை கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே இந்த ‘ஸ்மார்ட் போன்’ வசதிகள் வழங்கப்பட்டன.

கொரோனா பாதுகாப்பு சுகாதார வழிகாட்டலுக்கு அமைய நடைபெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், விசேட அதிதிகளாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) தெய்வேந்திரா, வன்னி ஹோப் நிறுவனத்தின் கல்வி அபிவிருத்தி திட்டத் திற்கா ஒருங்கிணைப்பாளர் தேவரஞ்சன் உட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ - 02)

## அனைத்து...

யிலும் அமைய வேண்டும் என்றும் தேர்தல்சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்றும் அக்கட்சி முன்மொழிந்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் நூற்றுக்கு 25 வீதம் பெண் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி குழு முன்னிலையில் தெரிவித்தது. சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் கூடிய இவ் விசேட குழு முன்னிலையில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கருத்துத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் சாகல ரத்னாயக்க, பாராளுமன்றமானது இலங்கையின் பல்வேறு தேர்தல் தொகுதிகளை உண்மையில்பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனமாக அமைய வேண்டும் என்றார்.

இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் அல்லது வேறு நாட்டில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட, தொடர்புகளைக் கொண்டுள்ள நபர்கள் இலங்கையில் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது வரையறுக்கப்பட வேண்டும் அல்லது தடுக்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி விசேட குழு முன்னிலையில் சுட்டிக்காட்டியது.

தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற வாக்காளர்களின் மக்கள் தொகையைப் பிரதிபலிக்கும் வகையில் பாராளுமன்றத்தின் கூட்டமைவு இருக்க வேண்டும் என்றும், இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்காளர்களினால் மற்றும் தேசியப் பட்டியலின் ஊடாகத் தெரிவு செய்யப்படவேண்டும் என்றும் அக்கட்சி தெரிவித்தது.

பொதுத் தேர்தலின்போது கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களுக்கான நிதி ஆதாரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது. தேர்தலின் போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் மேற்கொள்ளக்கூடிய செலவுகள்மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கட்சித் தாவல்களுக்கு இடமளிக்கக் கூடாது என்பதுடன், ஒரு உறுப்பினர் தனது கட்சியிலிருந்துமாறினால் அவர் அல்லது அவர்கள் கட்சியின் பட்டியலிலிருந்து தானாகவே நீக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறை தொடர்பான மாதிரிகள் சிலவற்றை பாராளுமன்ற விசேட குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை மதிப்பாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவின் உறுப்பினர் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர்பேராசிரியர்சுதந்த லியனகே முன்வைத்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் தற்பொழுது காணப்படும் பாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் தேவையை பேராசிரியர் சுதந்த லியனகே இங்கு சுட்டிக்காட்டினார். மிகவும் பொருத்தமான கலப்பு தேர்தல் முறையொன்று நாட்டுக்கு அவசியம் என்ற பொதுவான நிலைப்பாடு இருப்பதாகவும் குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இங்கு தெரிவித்தார். தொகுதியொன்றுக்குப் பொறுப்புக் கூறக்கூடிய உறுப்பினர் ஒருவரின் அவசியத்தையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால.டி.சில்வா, டக்ளஸ் தேவானந்தா, பவித்திரா வன்னியாராச்சி ஆகியோரும், பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர திசாநாயக்க, ரஞ்சித் மத்துமபண்டார, எம்.ஏ.சுமந்திரன், மனோ கணேசன், மதுர விதானகே, சாகல காரியவசம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

எல்லை நிர்ணய ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் போன்றவற்றின் அதிகாரிகளும் இச்சந்தர்ப்பத்தில் இணைந்துகொண்டிருந்தனர். பாராளுமன்ற விசேட குழு அடுத்ததாக எதிர்வரும் 13 ஆம் திகதி கூடும் என அக்குழுவின் செயலாளரும், பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹன தீர தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில்...

லகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று (நேற்று முன் தினம்) மாலை 4 மணிக்கு பின்னர் கிடைத்த தரவின் அடிப்படையிலே மொத்தமாக 248 நபர்கள் மேலதிகமாக தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் மொத்தமாக 14,192 பேர் நேற்று வரை இனங்காணப்பட்டுள்ளனர்.

281 இறப்புக்கள் பதிவாகியுள்ளன. நேற்று வரை தொற்றாளர்களுடன் தொடர்புகொண்ட 5384 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலில் உள்ளன.

மருதங்கேணியில் 3கிராமசேவகர் பிரிவும் வேலணையில் ஒரு கிராமசேவகர் பிரிவுமாக 4 கிராமங்கள் தற்போது முடக்கத்தில் உள்ளன.

தற்போது தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டமானது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

60 வயதிற்கு மேற்பட்டோர் தடுப்பூசி பெறுவதில் தயக்கம் காட்டுவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. எனவே 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் இறப்புகளும் அதிகரித்த வண்ணம் உள்ளன. எனவே பொதுமக்கள் தடுப்பூசி போடுவதற்கு தயக்கம் காட்டாது தங்களுக்குரிய தடுப்பூசியைப் போடுவதன் மூலம் இறப்புகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்

அத்தோடு அடுத்த கட்டமாக 20 வயதுக்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை விரைவாக ஆரம்பிக்க எண்ணியுள்ளோம்.

பொது முடக்கத்திலும் பொதுமக்கள் கட்டுப்பாடுகளை அனுசரித்து நடந்து கொள்ளாமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே பொதுமக்கள் தற்போதுள்ள பொது முடக்கத்தை துஷ்பிரயோகம் செய்யாது சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படுவதன் மூலம் இறப்புகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அவசியமற்று வீதிகளில் நடமாடாது வீடுகளில் இருத்தல் சிறந்ததாகும்-என்றார். (அ-03)

## 102 ஆண்கள்...

ணிக்கை 10 ஆயிரத்து 689 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 185 பேரில் 83 பெண்களும், 102 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## கொரோனாவால்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் நாளுக்கு நாள் மாறுபாடடைந்து முன்னரை விடவும் வீரியமிக்கதாக பரவல் அடைந்து வருகின்றது.

கொரோனா வைரஸ் தொடர்பில் ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை முழுமையாக அறிந்து கொள்ள இன்னும் காலம் ஆகலாம்.

இந்தப் புதிய வைரஸ்கள் கர்ப்பவதிப் பெண்களை அதிகம் பாதிப்பதோடு கருவில் உள்ள குழந்தையையும் ஆபத்துக்கு உள்ளாக்குகின்றது.

எனவே, தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, திருமணமான, குழந்தைகளை எதிர்பார்த்திருப்போர், கர்ப்பம் தரிப்பதை இன்னும் ஒரு வருடத்துக்குத் தாமதப்படுத்தினால் நல்லதாகவே கருதுகின்றோம்.

இதனால் இந்தக் காலப்பகுதியில் பொருத்தமான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றுவது சிறந்தது" - என்றார். (இ)

### பாதுகாப்பு கலந்துரையாடலை மேற்கொள்ள

# இலங்கைக்கு விஜயம் செய்தனர் இந்திய இராணுவ அதிகாரிகள்!

கொழும்பு, செப். 09

பிராந்திய பாதுகாப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ள இந்திய இராணுவ அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியப் பாதுகாப்புத்துறை அதிகாரிகளை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பால்லே வரவேற்றுள்ளார்.

"பிராந்தியத்தில் மிகப்பெரிய இராணுவக் கூட்டுப் பயிற்சியான மித்ர சக்தி உள்ளிட்ட இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான வழிகள் குறித்து இலங்கை இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவதே இந்திய இராணுவக் குழுவினரின் நோக்கமாகும்" என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## சர்வதேசத்துக்கு...

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து வத்திக்கானுக்கு விளக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையை எதிர்த்து, இலங்கை கத்தோலிக்க தேவாலயம் ஏற்கனவே பரிசுத்த அமைப்புக்கு நிலைமை குறித்து விளக்கியுள்ளது என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் சுட்டிக்காட்டினார். ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இந்த பிரச்னையை வத்திக்கான் விரைவில் பரிந்துரைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து பாப்பரசர் பிரான்சிஸூக்கு விளக்கமளிப்பார்கள் என்ற செய்தி வெளிவந்திருந்த நிலையில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (இருந்த போதிலும் பாப்பரசரை பிரதமர் சந்திக்கும் திட்டம் இல்லை என பிரதமரின் ஊடகப்பிரிவு நேற்றிரவு தெரிவித்தது)

"அரசாங்கம் சர்வதேசத்துக்குச் சென்றால் நாங்களும் அதையே செய்வோம், எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் ஏற்கனவே வத்திக்கான் பிரதிநிதியிடம் நீதி குறித்து விளக்கினோம், மேலும் இந்த விடயம் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பப்படும் என்று அவர்கள் எங்களுக்குத் தெரிவித்துள்ளனர்" என்றும் ஆண்டகை கூறினார்.

"தாக்குதலுக்குப் பின்னால் இருப்பவர்களைக் காப்பாற்ற ஒரு சதித்திட்டம் சாமர்த்தியமான முறையில் முன்னெடுக்கப்படுகிறது என்றும் அரசாங்கத்துக்கு சாதகமான சூழ்நிலையை மாற்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது" என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## ஜெனிவா...

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்றை நேற்று அனுப்பிவைத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது, எனவே பொறுப்புக்கூறல் விடயத்தை மனித உரிமைகள் பேரவையில் வைத்துக்கொண்டிருக்கும் வரையில் மக்களுக்கு கிடைக்கவேண்டிய நீதியும் அரசியல் தீர்வும் தாமதித்துக் கொண்டே இருக்கும் என இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

எனவே இந்த விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்தக் கடிதம் மூலம் வலிறுத்தியுள்ளது.

கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர். கட்சி கடந்த ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் அனுப்பிய கடிதங்களும் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கையொப்பமிட்ட கடிதம் ஒன்று ஜெனிவாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனைவிட இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு பங்காளிக்கட்சிகள் அடங்கலாக ஐந்து கட்சிகள் இணைந்து, மற்றுமொரு கடிதத்தை ஏற்கனவே அனுப்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நேற்று 2,915...

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,691 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 89 ஆயிரத்து 969 ஆக உயர்வடைந்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த 81 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற கோண்டாவிலைச் சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவரும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்தனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 307ஆக உயர்வடைந்துள்ளது.

## இத்தாலி பயண...

யம் மேற்கொள்ளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வத்திக்கானில் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகையை சந்திப்பதாக வெளியாகும் செய்திகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

போலோக்னா பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள சர்வதேச மாநாட்டில் தலைமை உரை நிகழ்த்துதல் மற்றும் இராஜதந்திர சந்திப்புகளை அடிப்படையாகக்கொண்டு பிரதமரின் இத்தாலி விஜயம் திட்டமிடப்பட்டுள்ளது" என இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் குழுவினர் நேற்றிரவு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இத்தாலி புறப்படவிருந்தனர்.

## யாழில் 41 பேர்...

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று வடக்கின் 249 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இந்த விடயம் வெளிவந்தது.

யாழ். போதனா வைத்தியசாலையில் 12 பேர், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 09 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 05 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 04 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 03 பேர், யாழ்.சிறைச்சாலையில் 02 பேர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர் என 41 பேர் தொற்றுக்கு இலக்காகினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 06 பேர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 04 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 05 பேர் என 15 பேர் தொற்றுக்கு இலக்காகினர்.

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 8 பேர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 4 பேர், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர் ஆகியோருடன் பலாலி விமானப்படை முகாமில் ஒருவரும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu




# ஜனநாயக விரோத செயல்பாடுகளில் ராஜபக்ஷ அரசு ஒருபோதும் ஈடுபடாது!

## ஜகத் குமார எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, செப்.09

**“நல்லாட்சி அரசைப் போல் எமது ராஜபக்ஷ அரசு ஜனநாயக விரோதச் செயல்பாடுகளில் ஒருபோதும் ஈடுபடாது.”**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நுகர்வோர் விவகார சட்டங்களில் உள்ள குறிப்பாகத் தண்டப் பணம் உள்ளிட்ட விடயங்களைத் திருத்தங்களுக்கு உள்ளடக்கியிருக்கின்றோம். அதற்கான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. எனினும், சில கறுப்பு வர்த்தகர்கள் செய்கின்ற நடவடிக்கைக்கு எதிராகத் தீர்மானங்கள் அவசியம். கத்தியால் பாண் வெட்ட முடியும் அதேபோல் கழுத்தையும் வெட்ட முடியும்.

அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால், அதனைச் செய்யமாட்டோம். அத்தகைய ஜனநாயக விரோதச் செயல்பாடுகளை நல்லாட்சி அரசு செய்தது போல நாம் செய்ய மாட்டோம்.

இந்த நாட்டின் மக்களுக்கு நிவாரணமளிக்கையில் சட்டவிரோதமாகச் செயல்படுகின்ற வர்த்தகர்கள், அதிகாரிகளுக்கு எதிராக நடவ டிக்கை எடுக்கவே இந்த அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந் தோம். இந்தச் சட்டமானது தற்காலிகமானது.

அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு, டொலர் பிரச்சினை என்பவை மிக விரைவில் தீர்க்கப்பட்டு அவசரகாலச் சட்டமும் முடிவுக்குக் கொண்டுவரப்படும்” - என்றார். (இ)

# சந்தேகநபரை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை



கொழும்பு, செப். 09

போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை அடையாளம் காண உதவுமாறு, பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி பேருவளை கடற்பரப்பில் புலனாய்வுப் பிரிவினர், கடற்படையினர் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு என்பன இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 288 கிலோகிராம் 644 கிராம் ஹெரோயினுடன் ஐவர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தத் தொகை போதைப்பொருளை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு உதவினாரென கூறப்படும் பிரதான சந்தேகநபரை அடையாளம் காண்பதற்கு உதவுமாறு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

இலக்கம் 128/09, நிஸங்கசலா மாவத்தை, தலாஹேன, மாலபே அல்லது இலக்கம் 522/1/2 சல்மல் மாவத்தை, உடுமுல்ல, பத்தரமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த “பொபி மாலி“ எனப்படும் ‘களுத்துறை சமிந்த தாப்ரோவ்’ என்ற 41 வயது நபரையே பொலிஸார் தேடி வருகின்றனர்.

198017101618 அல்லது 801711618V என்பது அவரது தேசிய அடையாள அட்டை இலக்கமாகும்.

சந்தேகநபரின் புகைப்படத்தையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

இவர் தொடர்பில் தகவல் தெரிந்தால் 071-8592727 என்ற அலைபேசி இலக்கம் அல்லது 011-2343333, 4 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு தகவல் தருமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

## கொரோனா சூழலை பயன்படுத்தி

# காணிகளை விற்பனை செய்யும் அராஜகத்தை அரங்கேற்றும் அரசு

## வேலுகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 09

கொரோனா சூழலைப் பயன்படுத்தி காணிகளைத் தனியாருக்கு விற்பனை செய்யும் அராஜகத்தை அரசு முன்னெடுத்து வருகின்றது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மிகவும் கொடூரமான முறையில் அதிகரித்துச் செல்கின்றது. இந்தச் சூழ்நிலையில் நாடு ஸ்தம்பிதமடைந்துள்ளது. மக்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ளனர். மக்கள் வீடுகளிலிருந்து வெளியே வரமுடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையை அரசு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மக்களை வீடுகளில் அடைத்து வைத்துவிட்டு - மக்களை வீடுகளுக்குள் முடக்கி வைத்துவிட்டு மக்களது வாழ்க்கையில் விளையாடுகின்ற மிக மோசமான தீர்மானங்களை எடுத்து வருகின்றது.

அந்தவகையில் அரசினுடைய அமைச்சரவையில் இந்த வாரம் மலையகச் சமூகத்துக்கு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தக்கூடிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

எங்களுடைய மலையகச் சமூகத்தினுடைய, மலையக மக்களினுடைய இருப்பை அழிக்கின்ற, வாழ்வாதாரத்தை அழிக்கின்ற வாழ்க்கையை அழிக்கின்ற எதிர்காலத்தை இல்லாதொழிக்கின்ற செயல்பாட்டை இந்த அரசு ஆரம்பித்துள்ளது.

அந்தவகையில் இந்த அரசானது நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்கப் போகின்றோம் என்று கூறி, அதற்காக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பல தோட்ட நிலங்களை பண்ணைகளுக்கு, சில தனியார் நிறுவனங்களுக்கு, வெளியாருக்கு விற்பனை செய்வதற்கான அனுமதியை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

அந்தவகையில் கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி பிரதேசத்திலுள்ள கலபொட பிரதேசத்திலும், அதேபோன்று வட்டவளை பிரதேசத்திலுள்ள மவுன்ட்ஜின் தோட்டத்திலும் 811 ஏக்கர் நிலங்களை விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கண்டி மாவட்டத்தின் ஹந்தானை பகுதியிலுள்ள தெல்தொட்டை தோட்டத்தின் 200 ஏக்கர் நிலங்களையும், கிறேட்வெளி தோட்டத்தில் 150 ஏக்கர் நிலத்தையும் தனியாருக்கு விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, எங்களது மக்கள் 150 ஆண்டு காலமாக வாழ்ந்த, பராமரித்த, வளப்படுத்திய எங்களது மக்களின் வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்ற இந்த நிலங்களானவை கொரோனாத் தொற்று சூழலைப் பயன்படுத்தி வெளியாருக்கு விற்பனை செய்யும் அரஜாகத்தை இந்த அரசு இன்று நிறைவேற்றிக்கொண்டு இருக்கின்றது” - என்றார். (இ)

# ஓட்டோ - மோ.சைக்கிள் மோதி கோர விபத்து; ஒருவர் மரணம்

கொழும்பு, செப். 09

தனமல்வில - ஹம்பெகமுவ வீதியின் ஹெந்தகோண பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயி ரிழந்த நிலையில் இருவர் காயமடைந்துள்ளனர்.



ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி சம்பவ இடத்திலேயே உயி ரிழந்தார் என்று தெரி வித்த பொலிஸார், மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர்: உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதி - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்




7.30 மணி : வெள்ளிடை நுட்பம்- தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்